SS Digital's
Printers for all requirements
Type Setting, Colour, Black Photo Copy & Printing, Offset Printing, Photo Printing, Flex Printing, Book Page Making, Digital Imaging, Digital Album Making, Binding, Laminating, Framing
#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 - 22 24933 Mob: 071 - 5415854, 077 - 0773051
ssdigitals.shan@gmail.com
2013ம் ஆண்டுக்கான அனைத்து வகையான நாட்காட்டிகளும் எம்மிடம் தரமாகவும் விரைவாகவும் நியாயவிலையிலும் அச்சிட முடியும்



ஐப்பசி மாதம் 12ம் திகதி

October 28, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 14

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# மாணவர்களிடையே அதிகரிக்கும் போதை மருந்துப் பாவனை



திருக்கோணமலைப் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளுக்குப் பெருமளவில் அடிமைப்படத் தொடங்கியிருப்பதாகத் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த காலங்களில் கைகலப்புக்களில் ஈடுபட்ட மாணவர்கள் பெரும்பாலானவர்கள் குடிவகைகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததை உறுதிப்படுத்தப்பட்ட செய்திகள் தெரிவித்திருந்தன. தமிழ்ச் சினிமாவின் கதாநாயகத்தனத்தைக் காட்டும் ஓர் விடயமாக குடிப்பொருட்களின் பாவனை வெளிப்படத் தொடங்கிய நாள் முதல் பாடசாலை மாணவர்கள் பலர் இப் பழக்கத்திற்கு அடிமையாகத் தொடங்கியிருந்தனர்.

குடிப்பழக்கத்தின் தொடர்ச்சியாக மாணவர்கள் போதை மருந்துப் பாவனைக்குச் செல்லத் தொடங்கியிருப்பதை கடந்த வாரத்தில் மலைமுரசிற்குக் கிடைத்த செய்திகள் உறுதிபடத் தெரிவித்துள்ளன. போதைப்பொருட்களைப் பெரும் பணச் செலவில் கொள்வனவு செய்ய முடியாதுள்ள நிலையில் மாணவர்கள் சில அழகு சாதனப் பொருட்களை வீட்டுப் பாவனைக்கெனக் கொள்வனவு செய்யப்படும் பலசரக்குப் பொருட்களுடன் இணைத்துப் பயன்படுத்தி போதையைப் பெற முயற்சிப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத ஆசிரியர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

அண்மையில் நாட்டின் தெற்குப் பிராந்தியத்தில் இருமல் மருந்தைப் போதைப் பொருளாக பாவித்து ஊசிமருந்துக் கருவிமூலம் இரத்த நாளங்களில் செலுத்திய இளைஞர்களில் சுமார் எழுவர் மரணமாகியுள்ளமை பெரும் அதிர்ச்சியை உருவாக்கியிருந்தது. அம் மரணங்களைத் தொடர்ந்து இவ்விருமல் மருந்துப் பாவனையை அரசு தடைசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(10ம் பக்கம் பார்க்க)

## புதிய பொலிஸ் பதிவு – நகரப் பகுதிகளில் காவல்துறையினர் பவனி

திருமலை நகரப் பகுதிகளின் சில இடங்களில் காவல்துறையினர் புதிய பதிவுகளை மேற்கொள்வதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

வர்த்தக நிலையங்களுக்கு கடந்த சில நாட்களாக வர்த்தக நிலையங்களிற்கும் வீடுகளுக்கும் வருகைதந்த காவல்துறையினர் வர்த்தக நிலையங்களில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் படி ஆளணியினர் உள்ளனரா? என்ற ஆராய்ச்சியை மேற்கொண்டதுடன் புதியவர்களின் பெயர் விபரங்களைப்

(10ம் பக்கம் பார்க்க)

## குத்தகைக்கு வருகின்றன நகரசபையின் கடைகள்

திருக்கோணமலை நகராட்சி மன்றத்தின் சகல கடைகளையும் அடுத்த 2013ம் ஆண்டிற்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன. குத்தகைக்கு எடுக்க விரும்புபவர்கள் அதற்கெனவுள்ள விண்ணப்பங்களின்

(10ம் பக்கம் பார்க்க)

## வரி வாரக் கூட்டம்




தேசிய வரி வாரம் நவம்பர் மாதத்தில் இலங்கை வரித் திணைக்களத்தால் கடைப்பிடிக்கப்படவுள்ளதை முன்னிட்டு திருமலையில் எதிர் வரும் முதலாம் திகதி

(10ம் பக்கம் பார்க்க)

## மத்திய அரசின் கைகளில் வீழ்ந்தது திருமலைத் தள வைத்தியசாலை

திருக்கோணமலை மாவட்டத் தள வைத்தியசாலையின் நிர்வாகத்தை மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

வடக்குக் கிழுக்கு மாகாண சபையின் உருவாக்கத்திலிருந்து அம் மாகாணசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த இத் தளவைத்தியசாலை பின்னர் கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்தது. இவ் வைத்தியசாலையின் மாகாண சனையின் இறுதிப்பணிப்பாளராக திரு.ஞானகுணாளன் அவர்கள் தனது 62வது அகவையிலும் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் கீழ் இவ் வைத்தியசாலை கொண்டுவரப்பட வேண்டும் என்பதனை இவ் வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுத் தலைவர்களும் விரும்பியதாகவும் அதனைத் தொடர்ந்து அவர்களது விருப்பத்தை எழுத்து மூலம் பெற்றுக்கொண்ட பின்னரே வைத்தியசாலையின் நிர்வாகத்தைத்

(10ம் பக்கம் பார்க்க)

## வெந்து நொந்தார் நகரசபை உறுப்பினர்.

திருமலை நகரசபையோடு தொடர்புபட்ட நிறுவகங்களின் ஏற்பாடு செய்யப்படுகின்ற விழாக்களில் நகரசபை உறுப்பினர்கள் அழைக்கப்படுவதில்லை என்றும் அவர்கள் புறக்கணிக்கப் படுவதாகவும் நகரசபை உறுப்பினர் ஒருவர் பொது நூலக வாணிவிழாவில் கலந்து கொண்ட நிலையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)



2012புலமைப்பரிசில் பரீட்சையில் சேனையூர் மத்திய கல்லூரியை சேர்ந்த ஜென்சியா ஜெகதீஸ் அதிகூடிய புள்ளியாக 160 பெற்று சித்தியடைந்தார்

## மார்க்க சொற்பொழிவு

(இம்தியாஸ்)

மூதூரில் புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு கடந்த 2012.10.21ம் திகதி நிதாவுல் ஹைர் நிருவனத்தின் அனுசரணையுடன் அந்-நஹ்லா இஸ்லாமிய சமூக ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மார்க்க சொற்பொழிவில் மூதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரியின் பிரதி அதிபர் அஷ்ஷெய்க் கே.எம். ஹரீஸ்(நத்வி) அவர்களால் "இப்ராஹிம் நபியவர்களின் குடும்பத்தின் தியாகமும் சமூகம் பெற வேண்டிய படிப்பினைகளும் என்ற தலைப்பிலும் அந்-நஹ்லா இஸ்லாமிய சமூக ஒன்றியத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். சலீத் (நத்வி-B.A) அவர்களால் "அகிலத்தாரின்

(10ம் பக்கம் பார்க்க)

## புனித சூசையப்பர் கல்லூரியின் முன்னைய அதிபருக்குப் பாராட்டு!

புனித சூசையப்பர் கல்லூரியன் முன்னையை அதிபரான அதி. வணக்கத்திற்குரிய பிதா ஜீவனதாஸ் பெர்ணாண்டோ அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவொன்றை பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினோர் கூட்டாக இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் 31ம் திகதி மதியம் 11 மணிக்கு [illegible]

(10ம் பக்கம் பார்க்க)

## பெயர் மாறும் பிரதேசங்கள் (சே)

அண்மையில் வெளிவந்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குயரசின் வர்த்தமானப் பத்திரிகையொன்றில் (2012.10.05) திருக்கோணமலை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படும் தமிழ்ப் பிரதேசங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாகப் பதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக பண்டைக் காலம் தொட்டுத் தமிழ்ப் பெயர்களைக் கொண்டிருந்த முக்கிய தமிழ்ப் பிரதேசங்களான தம்பலகமம், வெருகல், ஈச்சிலம்பற்று ஆகியன முறையே தம்பலகம, வருகல, [illegible] எனக் குறிப்பிடப் பட்டுள்ளன.

(10ம் பக்கம் பார்க்க)

## வாணி விழாக் கொண்டாட்டம்.

(இம்தியாஸ்)

மூதூரிலும் கடந்த 2012.10.23 ம் திகதி செவ்வாய்க்கிழமை அந்தோனியார் மகா வித்தியாலயத்திலும் , மூதூர் தள வைத்தியசாலையிலும் 2012.10.24 புதன் கிழமை மூதூர் வலயக்கல்வி அலுவலகத்திலும் பூசை வழிபாடுகளுடன், அன்னதான நிகழ்வுடன் மிகவும் கோலாகலமாக நடந்து முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

இராணுவ மீட்சியின் பின் கிழக்கு மாகாணக் கதவுகள் யாவருக்குமாய்த் திறந்து கிடக்கின்றது. பலவகை மனிதர்கள், பல வகை நிறங்கள், பலவகை மொழிகள் பல்வேறுபட்ட உல்லாசங்கள் வருவதும் போவதுமாய்ப் போயுள்ள எம் வாழ்வினுள் நிலைத்திருக்கும் மனிதர்களாய் நாம் இம் மண்ணில் வாழ்கின்றோம்.

வருவோரெல்லாம் உல்லாசமாயிருக்கத் தேடும் பொருட்கள் எம் வாழ்வை அழிப்பனவாய் வடிவம் கொள்கின்றன. போதையில் மிதப்பது கனவான்களினதும், கதாநாயகத்துவத்தினதும் இன்றியமையாத விடயங்கள் என எம் இளம் சந்ததி கற்றுக்கொள்கின்றது. புகைப்பிடிப்பது ஆண்மைக்கழகு என்னும் கருத்து அவர்களிடையே ஆழம் கொண்டுள்ளது. அப் புகைப்பிடித்தலே அவர்களது ஆண்மையைச் சிறிய வயதிலேயே கொள்ளை கொண்டுவிடும் எனும் உண்மையைப், பெற்றோரே! உங்களைவிட யாரால் அவர்களுக்குப் போதிக்க முடியும்?

போதைப் பொருட் பாவனை நிறைந்து விடப்பட்ட மாவட்டமாய்த் திருமலை ஆகிவருகின்றது. குடிவகைகளை சிறு வயதிலேயே அருந்திப் பழக்கப்படும் கட்டற்ற வாலிபக் குழந்தைகள் இலகுவாக போதைப்பொருட்களை நாடிப் போகும் நிலை திருமலையிலும் உருவாகி வருகின்றது.

வெண்நிறத் தோல் போர்த்து வருவோரெல்லாம் கனவான்களென நாம் நினைத்துக்கொள்வதை தயவு செய்து தவிர்ப்போம். அவர்களின் உருவில் சில சாத்தான்களும் எம் மாவட்டத்தில் உலவுவதைக் கருத்திற் கொள்ளுங்கள். தகாத உறவுகளுக்காகச் செலவிட அவர்களிடம் நிறையவே தாள்களுண்டு. அதைவிட மலிவாக அவர்களால் பழக்கப்படுத்தப்படும் போதைப் பொருட்கள் அவர்கள் விட்டுச்சென்ற பின்னும் எம் மண்ணில் நின்று நிலைத்துச் சேதம் விளைவிக்கின்றன.

கடந்தவாரம் எமக்குக் கிடைத்த செய்திகளால் போதைப்பொருட்கள் பாடசாலை மாணவர்களை இலக்காக்கிக் கொண்டு இம் மாவட்டத்தில் நகரத் தொடங்கியிருப்பதை அறிய முடிகின்றது. அதனைக் கொள்வனவு செய்யப் போதிய பணமில்லாத மாணவர்கள் பல்வேறு இரசாயனப் பதார்த்தங்களைப் போதைக்காகப் பாவிக்க முனைவது பெரும் விளைவுகளை அவர்களிடையே ஏற்படுத்தப்போகின்றது. உடல் உள மாற்றங்கள் அவர்களை அறியாமலே நிகழப்போகின்றன. எமது எதிர்காலச் சந்ததியின் ஒரு பகுதி பீடை பிடித்து வளரப் போகின்றது.

இவ்வழிவிற்கான தார்மீகப் பொறுப்பை யாரும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆனாலும் பெற்றோருக்கும் அவ்விளைஞர்கள் வாழும் சமூகத்திற்கும் இதனைத் தடுப்பதற்குப் போதுமானளவிற்குப் பொறுப்பிருக்கின்றது.

பெற்றோர்களே! தயைகூர்ந்த உங்களின் பருவக் குழந்தைகள் மீது போதியளவு கவனம் கொள்ளுங்கள். அவர்களிடையே நிகழும் மாற்றங்களைக் குறித்துக் கொள்ளுங்கள். அம்மாற்றங்களுக்கான ஊற்றுவாய்களைக் கண்டுபிடித்து அவர்களை எங்களது குழந்தைகளாகவே இச் சமூகத்திற்குத் தாருங்கள்.

சமூகத்திலுள்ள எமக்குள்ள பொறுப்பென்ன? என்பதை நாங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். சமூகம் சார்ந்து அதன் புறக்காரணிகளில் ஏற்படும் பொருத்தமற்ற மாற்றங்களைக் குறித்துக்கொண்டு அதை உலகிற்குத் தெரியப்படுத்துங்கள். சமூகக் குழுக்களை உருவாக்கி தவறானவற்றை அன்புடன் திருத்த முற்படுங்கள். மாற்றம் வேறு எங்கிருந்தும் நிகழ்வதில்லை. அதன் ஆரம்பப் புள்ளியே தனிமனிதர்கள் தான். . . .

-ஆசிரியர்-

## திருமலை உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் வாணி விழா



இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினுடைய திருமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் வருடாந்தம் இடம்பெற்று வரும் நவராத்திரி நிகழ்வுகளில் இவ்வருடத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த 23.10.2012ல் வரோதய நகரில் அமைந்துள்ள நிறுவன வளாகத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.



நிறுவன இயக்குனர் திரு ம.வீமராஜன் அவர்கள் தலைமையில் மாணவர்களால் ஒழுங்கு செய்யபட்ட பூசை நிகழ்வுகளில் மாணவர்கள் விரிவுரையாளர்கள் , மற்றும் கல்வி சார ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

## திருக்கோணமலை சகஸ்ரா கல்வி நிலையத்தின் வாணி விழா.

திருக்காணமலை சகஸ்ரா கல்வி நிலையத்தின் வாணி விழா 23.10.2012 சவ்வாய்கிழமை கலை நிகழ்ச்சிகளுடன் நடந்தேறியது. பஜனை, பேச்சு, நடனம், விவாதம் எனப் பல்வேறு படையல்களாடு நடந்த இந்நிகழ்வின் பிரபல சிறுகதை எழுத்தாளர் நந்தினிசேவியர் கலந்து கொண்டு ‘சினிமாவிலிருந்து அதிகம் கற்க வேண்டியது அறிவா? சமூக கருத்துக்களா?’ என்ற தலைப்பில் இடம்பெற்ற விவாதத்திற்கு நடுநிலைமை வகித்து மாணவர்களையும் ஆசிரியர் களையும் நெகிழ வைத்தார்.

மேலும் கல்வியை மட்டும் மாணவர்களுக்கு அளிப்பதுமட்டும் தமது கல்வி நிலையத்தின் கடமையல்ல என்றும் கல்வியோடிணைந்து எமது கலைகளையும் ஊட்டுவதை தமது நிறுவனம் கடமையாய் கொண்ருக்கிறதென சகஸ்ரா கல்வி நிலைய நிர்வாகி திரு.ஜெ.ரொபட் அவர்கள் குறிப்பிட்டார்.

## “ஆசிரியர் பிரதீபாபிரபா-2012”விருது

### வென்றார் ஆசிரியர் அ.வா.றிஸ்வான்.



மகிந்த சிந்தனை தேசிய புனர்வாழ்வு வேலைத்திட்டத்திற்கேற்ப எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக் கூடிய தேர்ச்சிகள் நிறைந்த தேசத்தின் பிள்ளைகளை இலங்கையின் நற்பிரஜைகளாகச் சமுதாயத்திற்கு பெற்றுத்தர ஆசிரிய உத்தமராக எல்லையற்ற கருணையுடன் செய்த விலைமதிக்கமுடியாத சேவையை கௌரவிக்கும் முகமாக மூதூர் கல்வி வலய தி/ மூதூர் சதாம் வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர் அப்துல் வாஹிது முகம்மது றிஸ்வான் ஆசிரியர் இவ்வாண்டின் பெருமதிமிக்க **“ஆசிரியர் பிரதீபாபிரபா-2012”** விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வானது கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களின் அனுசரணையுடன் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை 2012.10.09 ம் திகதி காலை 10.00மணியளவில் மீபே கல்வித்தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி ஆசிரியர் 19.06.2007 ல் இருந்து இற்றைவரை ஐந்து வருடங்களுக்கு மேலாக பாடசாலையில் எவ்வித லீவும் விடுமுறையும் எடுத்திருக்கவில்லை அத்துடன் தனது கற்பித்தல் திறமையினூடாக பல்வேறு மாணவர்களை தேசியமட்டத்திற்கு சென்று வெற்றி பெறச்செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற வாணி விழாவின் போது எடுக்கப்பட்டவை

## குருக்ஷேஸ்ராவின் வருடாந்தக் கலைவிழா

22.10.2012 அன்று உப்புவளியில் அமைந்துள்ள அந்நிலையத்தில் இடம்பெற்றது.

திரு.க.சி.பிரப்பாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாபூஷனம் கனக மகேந்திரா அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு. திருமதி.சிவஞானம் அவர்களும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் திறமையை ஊக்குவிக்குமுகமாக இயல், இசை, நாடகம் என முத்தமிழ் நிகழ்ச்சிகள் மாணவர்களால் நிகழ்த்திக் காட்டப்பட்டன.

## மழையால் சேதமடையும் வீதிகள்

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக நகரின் பெரும்பாலான வீதிகள் சேதமடைந்துள்ளமையால் வாகன பாவனையாளர்கள் மற்றும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே பிரதான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில் உட்புற வீதிகளும் சேதமடைந்துள்ளமை தொடர்பாக பிரதேச மக்கள் பெரிதும் விசனம் தெரிவிக்கின்றனர். லிங்கநகர், உவர்மலை, அன்புவெளிபுரம் போன்ற பகுதிகளின் வீதிகள் பெரும்பாலும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

## மூதூர் தள வைத்தியசாலையில்...

(மூதூர் பிரியன்)

நாடலாவிய ரீதியில் 2012.10.25 ம் திகதி காலை 6.30 மணியிலிருந்து 2012.10.26 ம் திகதி காலை 6.30 மணிவரை 24 மணிநேர வைத்தியர்களின் பணிப்பகிஸ்கரிப்பு போராட்டம் இடம்பெற்றமையினால் நோயாளிகள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டு அவதியுற்ற நிலையில் இருந்ததாக சகல வைத்தியசாலை வட்டார தகவல்களினூடாக தெரிய வருகின்றது. இந்நிலையில் மூதூர் தள வைத்தியசாலையிலும் வைத்தியர்களின் பணிப்பகிஸ்கரிப்பு போராட்டம் ஒரு பக்கம் நிகழ்ந்தாலும் வைத்தியசாலைக்கு வந்த நோயாளிகளை வைத்திய அத்தியட்சகர் (MS), வைத்திய நிபுணர்(VP),அவசர சிகிச்சைப்பிரிவில் கடமையாற்றும் வைத்தியர்கள், On call வைத்தியர்கள் நோயாளிகள் பாரிய அளவில் பாதிக்கப் படாத அளவிற்கு தங்கள் கடமைகளை நேர்த்தியாக இன்றைய தினம் நிறைவேற்றியிருந்தமை பாராட்டக்கூறியதாகும்.

## க.பொ.த உ/த பெறுபேறுகள் 2013 ஜனவரி மாத இறுதியில் வெளியீடு

2012ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உ/த பரீட்சைக்கான பெறுபேறுகள் 2013 ஜனவரி 30ம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

## கிழக்கு முதலமைச்சரை அமெரிக்க தூதுவர் சந்திப்பு

திருக்கோணமலை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத்தை வியாழக்கிழமை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு திருக்கோணமலையிலுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது. இதன் போது மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் ஆங்கில கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்களுக்கு அமெரிக்கா வழங்கவுள்ள உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசுரம், பிரசவம், பிரவேசம்

-நந்தினி சேவியர்-

-சென்றவார தொடர்ச்சி-

இந்நேரத்தில் தினபதி, தினமொரு சிறுகதைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதற்கென ஒரு விண்ணப்ப படிவம் வெளியிடுவார்கள். அதில் எமது கதையைப் பிரபல எழுத்தாளர் சிபார்சு செய்து கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். அப்படி வரும் கதைகளே தினபதி தினமொரு கதைப் பகுதியில் இடம்பெறும். மலரன்பன், புரட்சிபாலன், எஸ்.எல்.எம்.கனிபா, நயீமா ஏ.பஷீர், இராஜம் புஸ்பவனம் என பல இளம் எழுத்தாளர்கள் சிபார்சின் மூலம் அறிமுகமாகினார்கள். தெளிவத்தை ஜோசப், நா.பாலேஸ்வரி, எஸ்.பொ. அ.ஸ.அப்துஸ்ஸமது, வ.அ. இராசரெத்தினம் போன்ற எழுத்தாளர்கள் பலரது கதைகளைச் சிபார்சு செய்து பிரசுரமாக உதவினார்கள்.

எனக்குமொரு ஆசை. எனது கதை ஒன்றை பிரசுரமாக்க வேண்டும். முதிய எழுத்தாளர்கள் யாருடனும் பழக்கமில்லை யாரிடம் போவது....? ஏமாற்றம் ஏற்பட்டது. ஆயினும் நூல் நிலையம் சென்று தினபதி பத்திரிகையை எடுத்து தினமொரு சிறுகதையைப் படிப்பேன். மேற் குறித்த எழுத்தாளர்கள் சிபார்சு செய்த நான் குறிப்பிட்ட இளம் எழுத்தாளர்களின் கதைகளைப் படிப்பேன். எனது கதையும் பிரசுரமாகாதா என்கின்ற ஆவல் எனக்குள் மேலும் அதிகரிக்கும், மார்க்சிய சிந்தனை வசப்படாத எனக்கு பினியல், ஜீவா, ரகுநாதன், யோகநாதன், நீர்வை பொன்னையன் போன்றோரின் பழக்கமும் இல்லை. நண்பன் சமரக்கொடி (தர்மகுலசிங்கம்) தனக்கு 'யாழ் வாணன்' சண்முகநாதனைத் தெரியும் என்றும் எனது கதை ஒன்றையும் படிவத்தையும் தருமாறு கூறினார். ஒரு கதையும் படிவமும் அவரிடம் கொடுத்தேன். யாழ் நகர மண்டபத்தில் வேலை செய்யும் அவர் நெல்லியடி அரசடியில் இருந்தார். அவரை நான் ஒருபோதும் சந்தித்ததில்லை. அவர் எனது கதையை சிபார்சு செய்து தந்தார். நான் தினபதிக்கு அக்கதையை அனுப்பினேன். அந்தக்கதை பிரசுரமான விபரம் எனக்குத் தெரியாது. பிரசுரமாகியிருக்கலாம். இப்போது நான் எழுத்தாளனாகிவிட்டேன். எனது கதையை யாழ்வாணன் எந்தவித அடித்தல் திருத்தல் இல்லாமல் என்னிடம் தந்தமையால் எனக்குள் ஒரு துணிவு ஏற்பட்டுவிட்டது. தொடர்ச்சியாக எழுதும் உற்சாகம் ஏற்பட்டது.

எனது மூத்த சகோதரன் தே.பெனடிக்ற் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் ஊழியர். சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்க அங்கத்தவர். அவர் மூலமே குமுதம், தமிழ்ச்சினிமா, பொம்மை போன்ற தமிழக சஞ்சிகைகளை அறிந்திருந்தேன். செ.கணேசலிங்கனின். 'ஒரே இனம்' என்.பொ.வின் 'தீ' என இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்களை முதன்முதலாக அவர் மூலம் தான் வாசிக்கக் கிடைத்தது. இது பற்றி முன்னரும் குறிப்பிட்டிருக்கின்றேன். எமிலி ஜோலாவின் மனித மிருகத்தையும் அ.ந.கந்தசாமி மொழி பெயர்த்த நானாவையும் அறிந்திருந்தேன். தொழிலாளி பத்திரிகையை அறிமுகம் செய்தவரும் அவரேதான். ஆனால் அவரிடம் நான் அரசியல் அனுபவத்தைப் பெறவில்லை. எனது சகோதரன் 1966ம் ஆண்டு மின்சாரம் தாக்கி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் மரணித்தமையின் தாக்கம் என்னை மிகவும் பாதித்தது. நான் அந்த சோகத்திலிருந்து மீண்டெழுவதற்கு நண்பர் அருளும் ஒரு காரணம். நண்பர் என்பதைவிட தோழர் என்பது பொருத்தமாக இருக்கும். அவர் ஏலவே அல்வாய் வாலிப சங்கக் கிளையில் உறுப்பினர். அவர் எனக்கு மா.ஓவின் படைப்புகளை வாசிக்கத் தந்தார். முதலில் அதிருப்தியைத் தந்த அந்தப் புத்தகங்கள் என்னை ஈர்க்கத் தொடங்க நான் மார்க்சிய தத்துவத்தை ஏற்பவனாக மாறினேன். சீன சார்புக்காரனாகினேன். அல்வாய் வாலிப சங்க சம்மேளன அங்கத்தவனாக இணைந்து கொள்ள விரும்பினேன். ஆனாலும் எனது எழுத்துக்கள் அப்போதும் பழைய பாணியிலேயே இருந்தன. வாலிப சங்கத்தில் சேரும் போது செ.யோகநாதனின் 'யோகநாதன் கதைகள்' சிறுகதைத் தொகுதியை வாசிக்கக்கிடைத்தது. ஏற்கனவே ஜெயகாந்தனின் முத்திரைக்கதைகளை ஆனந்த விகடனில் படித்து அவர்பால் ஈர்ப்புற்றிருந்தேன்.

எனது கதை ஒன்றை நண்பர் ஒருவர் மூலம் தினபதிக்கு சிபார்சு பண்ணும்படி செ.யோகநாதனுக்கு அனுப்பினேன். அவரிடமிருந்து மணிமணியான எழுத்தில் ஒரு கடிதம் கிடைத்தது. முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் அவர் ஒரு ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். டானியல் கதைகள், மேடுபள்ளமும் (நீர்வை பொன்னையன்) நிலவிலே பேசுவோம் (என்.கே.ரகுநாதன்) மார்க்சிம் கோர்க்கியின் 'தாய்' என்பனவற்றைப் படிக்குமாறு எனக்கு ஆலோசனை வழங்கியருந்தார். மூன்று கதைகளைச் தினபதி தினமொரு சிறுகதைப் பகுதிக்கு சிபார்சு செய்து அனுப்புமாறு செ.யோகநாதனுக்கு அனுப்பினேன் என்பது ஞாபகம். ஆனால் ஒன்று கூட பிரசுரமாகவில்லை...

ஒரு முடிவுக்கு வந்தேன் எனது (ஆண்) பெயரில் எழுதினால் பிரசுரமாவது அசாத்தியம் என முடிவு செய்தேன். அப்போது வீரசேகரிப் பத்திரிகையில் கே.வி.எஸ். வாஸ் அவர்கள் (வீரகேசரி ஆசிரியர்) நந்தினி எனும் பெயரில் தொடர்கதை ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார். அவரது புனைப்பெயர் ரஜனி நான் நந்தினியாக மாறத் தீர்மானித்தேன். 'பாரம்' எனும் சிறுகதையை சுதந்திரன் வாரப் பத்திரிகைக்கு அனுப்பினேன். எனது முதல் கதை... நான் ஒரு பெண் எழுத்தாளர்! ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் குறைவாக இருப்பது வருத்தம் தருவதாக ஒரு கடிதத்தையும் அத்துடன் இணைத்திருந்தேன். மூன்று வாரங்கள் கழிந்து விட்டது. நம்பிக்கை ஏற்படவில்லை ஏதோ ஒரு முக்கிய விடயமாக வல்வெட்டித் துறைக்குச் சென்றிருந்தேன். தற்செயலாக வல்வெட்டித்துறை நூல் நிலையத்தினுள் நுழைந்தேன் சுதந்திரன் பேப்பர் விரித்தபடி மேசையில் இருந்தது. 'பாரம்' எனும் எழுத்து என்னை துணுக்குற வைத்தது. பரபரப்போடு சுதந்திரனை எடுத்தேன் 'நந்தினி' எழுதிய பாரம் கதைதான் அது. நம்பவே முடியவில்லை பெட்டிகட்டி என்னைப் பெண் எழுத்தாளராக அறிமுகம் செய்திருந்தார்கள்.

நண்பர்களே, தோழர்களே தனது முதல் படைப்பை அச்சுருவில் பார்க்கும் படைப்பாளியின் அந்தச் சந்தோசத்திற்கு நிகரான சந்தோசம் வேறெப்போதும் கிட்டாது. ஒரு தாய்க்கு தன் முதல் பிரசவ பிள்ளையை ஈன்ற போது ஏற்படும் அத்தகைய மகிழ்ச்சியை நான் அனுபவித்தேன். உங்களில் பலருக்கும் அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கும் என நம்புகிறேன் - இல்லையா?

# கடல் தின்ற நம் நிலம் - 2

**கா .செந்தூரன்**

சென்ற வாரத் தொடர்ச்சி ......

கடலின் ஆழத்தில் புதைந்து காணப்படும் வரலாற்று புதையல்களில் மர்மங்களும் புதிர்களும் நிறைந்தது குமரிக்கண்டம். இதுவரை காலமும் குமரி தொடர்பான ஆராச்சிகளில் ஈடுபட்ட இந்திய மற்றும் மேலைநாட்வர்கள் ஒன்றுக்கொன்று முரணான கருத்துகளை வெளியிட்டுள்ளனர். ஆனால் குமரிக்கண்டம் என்ற தமிழ் கண்டம் இருந்ததை யாராலும் மறுக்க முடியாதுள்ளது. எது எவ்வாறாயினும் எல்லைக்கல் 20,000 வருடங்கள் பழமையான புதிரை அவிழ்க்க முனைகிறது.

கி.மு. 17000 - 10000 ஆண்டுகளுக்கு முன்னர் உலகிற்கு கலாசாரத்தை பாரிய நிலப்பரப்பில் இருந்து கொண்டு உற்பத்தி செய்த தமிழ் பேசும் கூட்டத்தாரின் நிலப்பகுதிதான் இந்த குமரிக்கண்டம். இன்று தனி நாடுகளாகி இருகின்ற இலங்கை, அவுஸ்திரேலியா, மடகஸ்கார் ,இந்தியா, போன்ற நாடுகளின் நிலப்பகுதியை உள்ளடக்கியதாக குமரிக் கண்டம் காணப்பட்டது.

1960-ம் ஆண்டு அமெரிக்கா, பிரான்ஸ், ரஸ்யா ஆகிய நாடுகள் கூட்டாக குமரிக் கண்டத்தை ஆராய்ந்தது. அப்போது தான் கடலுக்குள் மலைகளும் நீரோட்டங்களும் சில கட்டிட எச்சங்களும் இருப்பது தெரிய வந்தது. அதன் பிறகு அமெரிக்க தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் குமரிகண்டத்தின் வரைபடத்தை வெளியிட்டனர்.

அப் படத்தில் குமரிக்கண்டத்தின் நாடுகளும், நகரங்களும் மலைகளும், ஆறுகளும் குறிக்கப்பட்டன.

**குமரிக்கண்டத்தின் நாடுகளும் நகரங்களும்**

இக் கண்டம் எழு நாடுகளாக அமைந்து காணப்பட்டன அவையாவன.

- •ஏழு தெங்க நாடு
- •ஏழு மதுரை நாடு
- •ஏழு முன்பலை நாடு
- •ஏழு பின்பலை நாடு
- •ஏழு குன்ற நாடு
- •ஏழு குனக்கரை நாடு
- •ஏழு குறும்பனை நாடு

இவ் ஒவ்வொரு நாடுகளுக்குள்ளும் இன்றைய ஈழத்தையும் உள்ளடக்கி நாற்பத்தொன்பது மாநிலங்கள் இருந்ததிருந்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது .

அம்மாநிலங்களின் தலைநகராக அன்றைய காலகட்டத்தில் வடமதுரைதான் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அது மட்டும் அல்லாது அம் மாநிலங்களுக்குள் **தென்மதுரை, கபடாபுரம், முத்தூர்** என்பன முக்கிய நகரங்களாக இருந்திருக்கின்றன.

குமரி கண்டத்தின் ஒரு அங்கமாக இரு மலைகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. அம் மலைகள் இந்து சமுத்திரத்தின் புதைந்து போயிருப்பதால் தற்போது அவையுள்ள இடத்தில் இந்து சமுத்திரத்தின் ஆழத்தைக் குறைத்து காட்டுவதாகத் தெரிகின்றது. அம்மலைகள் முறையே குமரிக்கோடு, மணி மலை என்ற பெயர்கொண்டு காணப்படுகின்றன. அக்கண்டத்தில் காணப்பட்ட பொதிகை மலை (தமிழ்நாடு) மற்றும் சிவனொளி பாதமலை (இலங்கை) இன்றும் நம் கண்முன்னே உள்ளன. அதுமட்டும்



அல்லாது குமரிக்கண்டதில் பறுளி, குமரி என்ற இரு பாரிய நதிகளும் இருந்திருக்கிறது.

இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் இங்கு குறிப்பிட்ட நகரங்களும் ஆறுகளும் மலைகளும் இன்றுவரை கண்டுபிடிக்கப்பட்டவையாக உள்ளன.

உலகம் உண்டாக காரணமாக இருந்த பிரபஞ்ச பெரு வெடிப்பின் பின் உலகம் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் மனிதன் என்ற விலங்கு உட்பட எந்த உயிரினங்களும் இந்த பூமியில் தோன்றி இருக்காது. பூமியின் பௌதிகமும் கால நிலையும் மாற பூமியும் மாறிக் கொண்டு வந்திருக்கிறது.

**அப்படியான பல மாறுதல்கள் நம் குமரிக்கண்டத்தை கடலுக்கு கொடுத்து விட்டன என்பதே உண்மை.**

**அப்படி என்ன நடந்தது நம் குமரிக்கண்டதிற்கு ...அடுத்த வாரமும் தேடுவோம் ...**

(இன்னும் நடுவோம்) ...




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டொரன்ஸ் என்னும் தகவல் தொழில்நுட்பப் புதையல்

தர்சாந்

இன்று கணிணி பாவனையாளர்கள் அனைவரினதும் நாளாந்த கடமைகளில் ஒன்றாக தரவிறக்கம் என்பது ஆகிவிட்டது. இந்த பிற்டொரன்ட் (Bittorrent) எனும் தரவிறக்க (Download) நுட்பம் சாதாரண தரவிறக்க முறைகளில் இருந்து வித்தியாசப் படுகிறது. சொல்லப் போனால் வேண்டியதெல்லாம் தருகிறது. இதை எப்படி பயன்படுத்துவது என அறிந்து கொள்ளமுன் இதன் அடிப்படைகளை பற்றிக்கொஞ்சம் பார்ப்போம் வாருங்கள்.

### டொரன்ட்ஸ் (Torrents) என்றால் என்ன?

வழமையான தரவிறக்கங்களை நாம் செய்யும் போது சேவையகக் கணிணியில் (Server)) இருந்தே தரவிறக்கம் செய்யப்பப்படும். கணிணியை நிறுத்தினால் தரவிறக்கத்தைத் தொடர முடியாது.

ஆனால் டொரன்ட்ஸ் உலகில் இது சாத்தியம். இவ்வாறான சாத்தியப்பாடுகள் மற்றும் ஒரு கணிணியில் இருந்து இன்னொரு கணிணி ஊடாக தகவல்களை கடத்தும் நோக்குடனும் ஒரு கணணிச் செயல் நிலையை (Protocol) Bram Cohen என்ற கணிணி அறிவியலாளர் 2001ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்த செயல்நிலையின் பெயர் தான் Bit torrent.

முதலில் ஒருவர் ட்ரக்கர் (Tracker) என்ற தகவல்கள் அடங்கிய டொரன்ட்ஸ் கோப்பை உருவாக் குவார். குறித்த கோப்பை யார் வேண்டுமானாலும் (சில கோப்புகள் சிலர் மாத்திரம் பயன்படுத்துமாறு செய்யப்படும்) உருவாக்கலாம். Tracker கோப்பை பயன்படுத்தி தேவையானவற்றை Download செய்யலாம்.

### எப்படி பயன்படுத்துவது ?

Torrents தொழில்நுட்பத்தில் தகவல்கோப்பு முழுமையாக இறக்கப் படுவதில்லை. முதலில் இது சிறு சிறு பாகங்களாக பிரிக்கப்படும். இவற்றுடன் Cryptographic hash என்ற முறையில் இரகசிய தகவல் இணைக்கப்படும். இதே இரகசிய தகவல் torrents என்ற கோப்பில் உள்ள இரகசிய தகவலுடன் பொருந்தினால் மாத்திரமே தரவிறக்கம் வெற்றியளிக்கும். இந் நடைமுறை விஷமிகளின் ஊடுருவலை முழுமையாக தடுக்கிறது.

முதலில் torrents என்ற கோப்பை தரவிறக்கிகொள்ள வேண்டும். பின் கையாளக்கூடிய torrents client எனப்படுகின்றன மென்பொருள்களில் ஏதாவது ஒன்றை கணிணியில் நிறுவிக்கொள்ள வேண்டும்.

சிறந்த torrents client மென்பொருள்கள் :

- µ torrent - மிக சிறியது சகல வசதியும் உடையது.
- Bittorrent - முதலில் உருவாக்கப்பட்டது.
- Vuze
- Deluge

இதில் ஏதாவது ஒன்றை Download செய்து கணிணியில் நிறுவிகொள்ளுங்கள் பின்னர் நாம் எமக்கு தேவையான கோப்பினுடைய torrent magnet என்ற fileயை Dowload செய்யவேண்டும். இந்த கோப்பு torrent என்று முடிவடையும். இவ்வாறான magnet களை தரவிறக்க நிறைய தளங்கள் இருக்கின்றன.

அவற்றில் சில சிறப்பானதளங்கள்

www.thepiratebay.org
www.mininova.org
www.isohunt.com
www.torrentz.com
www.Demonoid.dom
www.kat.ph

தமிழ் பட, பாடல் பிரியர்களுக்கு **www.tamil torrents.com**. ஆரம்ப பயணர்களுக்கு இந்த தளம் புரியும்படி இருக்கும்.

இந்த தளங்களில் எமக்கு தேவையானவற்றுக்கான torrent magnetயை தரவிறக்கி ஏற்கனவே Install செய்த torrent client யை உதாரணம் µ torrent மூலம் open செய்தால் file ஆனது Download ஆக தொடங்கிவிடும். உதாரணத்துக்கு Photoshop cs5 தேவைப்படுகிறது எனில் www.thepiratebay.se என்ற தளத்திற்கு செல்லுங்கள். அந்த தளத்தில் உள்ள search bar ல் "Photoshop cs5 crack" என type செய்யுங்கள். உங்களுக்கு தேவையான magnet யை அது காட்டும் Download torrent அல்லது Download magnet என்ற லிங்கை கிளிக் செய்யுங்கள்.

இதை நீங்கள் Install செய்து µ torrent என்ற மென்பொருள் மூலம் open செய்தால் தரவிறக்கம் தொடங்கிவிடும்.

### சிறப்பு வசதிகள்

√ தொடர்ந்து தரவிறக்க வேண்டிய அவசியமில்லை. Pause, Resume வசதி உண்டு.

√ ஒரே நேரத்தில் பலகோப்புகளை Download செய்யலாம் எது முதலில் Download ஆகவேண்டும் என தீர்மானிக்கலாம்.

√ ஒரு சேர்வரில் இருந்து Download ஆவதில்லை.

நீங்கள் photoshop Download செய்து வீட்டீர்கள் என வைத்து கொள்வோம் அமெரிக்காவில்

மிகுதிப் புதையலை அடுத்த வாரம் தோண்டுவோம்

# திருக்கோணமலை மாவட்டத்தில் இரண்டாவது தடவையாக புனித ஜோன் அம்புலன்ஸ் தேசிய கடேற் பாசறை-2012.

புனித ஜோன் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய கடேற் பாசறை இரண்டாவது தடவையாக இவ்வருடம் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள தி/ நிலாவெளி தமிழ் மகா வித்தியாலத்தில் எதிர்வரும் 26/10/2012 முதல் 29/10/2012 வரையான நான்கு நாட்களும் நடைபெறவுள்ளது. இப்பாசறையில் இலங்கையின் நாலாபக்கதிலிருந்தும் அனைத்து இனங்களை பிரதிநிதித் துவப்படுத்தும் படை அங்கத்தவர்களும், அதிகாரிகளும் கலந்த சிறப்பிக்கவுள்ளனர்.

இப்பாசறையில் அணி நடைப் போட்டி, முதலுதவிப்போட்டி, கலாசாரப் போட்டி, தனிநபர் திறமைகாண் போட்டி, சிறந்த பாசறை அமைக்கும்போட்டி, சிறந்த மாவட்டத்திற்கான போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன. இப்பாசறையில் விசேட நிகழ்வாக பிற மாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்களுடன் எமது படையினரும் இணைந்து ஒரு நாள் திருக்கோணமலை மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் தரிசிக்கும் நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 28/10/2012 மாலை பாசறைத் தீ நிகழ்வும், 29/10/2012 அன்று காலை அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசளிப்பு நிகழ்வுடன் இத்தேசிய பாசறை நிறைவடையும்.

இப்பாசறையின் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் விமலவீர திசானயக்கா அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக புனித ஜோன் அம்புலன்ஸ் படையின் தேசிய தலைமையகத்தின் தலைவர் டாக்டர் பாலித ரந்தெனிய, பிரதான கட்டளை அதிகாரி டாக்டர் D.W.வீரசூரிய, ஆணையாளர் திரு.பிரசாந்த லால் டி அல்விஸ், பயிற்சிப் பணிப்பாளர் டாக்கடர் சரத் சமரகே அவர்களும். விசேட விருந்தினராக குச்சவெளி பிரதேச செயலாளர் திரு.A. உமாமகேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

அவ்வாறே 29/10/2012 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணக்கல்விப்பணிப்பாளர் E.M.E.போல் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக தேசிய தலைமையக அதிகாரிகளும், விசேட விருந்தினர்களாக திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து வலயக் கல்விப்பணிப்பாளர்களான திரு.N.விஜேந்திரன் (திருக்கோணமலை.) திரு.N.விஜயானந்தமூர்த்தி (மூதூர்), திரு.உபாலி விஜயலத் (கந்தளாய்), விமலசேன மத்தும ஆராச்சி (திருக்கோணமலை வடக்கு), திரு.U.L.மொகமட் காசிம் (கிண்ணியா) ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

அவ்வாறே பாசறைத் தீ நிகழ்வின் பிரதம விருந்தினராக குச்சவெளி பிரதேசசபைத் தலைவர் A.முபாரக் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக தி/நிலாவெளி மகா வித்தியாலய அதிபர் திரு.P.ஜயமுத்து அவர்களும், தி/ கும்புறுப்பிட்டி மெதடிஸ்த மிசன் த.க.பாடசாலை அதிபர் திரு.V.ராஜேந்திரன் அவர்களும், நிலாவெளி, மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி S.கொகிலன் அவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு காலி மாவட்டத்தில் திருக்கோணமலை மாவட்டம் அதிக போட்டிகளில் வெற்றியீட்டி சிறந்த மாவட்டமாகத் தெரிவு செய்ததைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு திருக்கோணமலை மாவட்டத்தில் முதலாவது தேசிய கடேற் பாசறை தி/விபுலானந்தா கல்லூரியில் நடாத்தப்பட்டது. அவ்வாறே 2011 ஆம் ஆண்டு கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்ற பாசறையில் வளர்ந்தோர் பிரிவில் அதிகப்படியானா வெற்றிகளை ஈட்டி சிறந்த மாவட்டமாகத் திகழ்ந்ததைத் தொடர்ந்து இவ்வருடம் இரண்டாவது தடவையாக தேசிய கடேற் பாசறையினை நடாத்தும் பொறுப்பும், பெருமையும் எமக்கு மீண்டும் கிடைத்துள்ளது.




ச.தேவசகாயம்
மாவட்ட
ஆணையாளர்

உங்கள் பிரதேச செய்திகளை உடனுக்குடன் மலைமுரசுக்கு தெரிவியுங்கள்
malaimurasu@hotmail.com
075 42 52 042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலைவிதிக் கேள்வி – எவ்வாறு ?

கடந்த இதழில் நாம் ஆராய்ந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலங்களில் முக்கியமானவற்றை. இன்று அக் கூட்டமைப்பின் முக்கிய பலவீனங்களை ஆராயலாம்.

எது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பலமாக விளங்கியதோ அதுவே அதன் பலவீனமாகவும் இருப்பது அவ்வமைப்பின் பெரும் சாபக்கேடாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தின் முக்கிய காரணியாக அமைவது ஐந்து கட்சிகளின் ஒன்றமைப்பு எனப் பார்த்தோமல்லவா? அதுவே அவ்வமைப்பின் பெரும் பலவீனமுமாகும். சுமார் 10 வருடங்களைத் தொடவிருக்கும் இக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஐந்தும் இற்றைவரை பொது இணக்கப்பாட்டுடன் ஒரே கட்சியாகப் பதிவு செய்யப்படாமலே உள்ளன. இவ்வாறு பொது இணக்கப்பாட்டுடன் ஒரே கட்சியாகப் பதிவு செய்யப்படாமலிருப்பதால் நினைத்த மாத்திரத்தில் கூட்டமைப்பை விட்டு வெளியேறிவிடும் வாய்ப்பு இற்றைவரை அவ் ஐந்து தனிக்கட்சிகளுக்கும் உள்ளது.

கூட்டமைப்பை விட்டுப் பிரிந்து போதல் என்பது தற்கொலைக்குச்



சமமானது எனினும் கூட்டமைப்பில் இல்லாமலுள்ள இரு தமிழ்க் கட்சிகள் பேரினவாதத் துணையுடன் அமைச்சுப் பதவிகளை அலங்கரித்திருப்பதைப் பார்க்கின்றோம் அல்லவா? இதே விலையை பேரினவாதிகள் எறியத் தயாராய் எப்போதும் இருக்கும் சூழ்நிலையில் கூட்டமைப்பைப் பொதுக் கட்சியொன்றாகப் பதியாமலிருப்பது "அக்கிலிஸின் பாதம்" போலல்லவா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளது. அக்குலிஸ் என்ற ரோமானிய வீரனின் போர்க்கவசமானது அவனது உடலை முழுவதும் போர்த்திருந்ததால் அவனை வாட்போரிலோ, விற் போரிலோ வெல்ல முடியாதிருந்தது. எனினும் அவனது போரங்கியை நுணுகி ஆராய்ந்த எதிரணிச் சேனாதிபதி அவனது பின் பாதங்களை அக்கவசம் சிறிய இடமொன்றில் மூடாதிருப்பதை கண்டு கொண்டான். அப் பலவீனத்தை தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட எதிரி முதலில் ஓர் அம்பை அப் பாதத்தைக் தைக்குமாறு ஏவினான். பின் நடக்க முடியாது நிலை தடுமாறிய அக்குலிசை எதிரிகளால் இலகுவாக கொல்ல முடிந்தது. இச் சரித்திர பாடம் சொல்வதென்ன? மிகச் சிறிய பலவீனமும் மிகப் பெரிய பலத்தை அழித்துவிடும் என்பதே. அதனால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பிரதானமான பலவீனமான ஐந்து தனிக் கட்சிகள் என்ற நிலையிலிருந்து மாறி ஐந்து தலைவர்களை மத்திய குழுவாகக் கொண்ட ஒரு கட்சி எனும் நிலைக்கு மாற வேண்டும்.

அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலவீனப்பட்டிருப்பது அதன் உள்ளகக் கட்டுமானத்தில். நாம் ஏற்கனவே பேசியது போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு நிறுவனக் கட்டமைப்பைக் (Organizational Structure) கொண்டிருக்க வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது.

நிறுவனக் கட்டமைப்பை நிறுவ முனையும் போது உள்ளக்க கட்டமைப்பைத் (Internal Structure) தெளிவாக வரையறுக்கவேண்டும். தன்னிடமுள்ள ஆளணி வளங்களை ஒன்றுகுவித்து (Mobilize) பின் அவ் ஆளணியினை முறையான பணிகளில் அமர்த்தியே உள்ளக்க கட்டமைப்பு வரையப்படுகின்றது. எனவே உள்ளகக் கட்டமைப்பிற்கான அடிப்படைத் தேவையாக தமது **பணிகள்** எவை என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து கொள்ள வேண்டும். தனது பணிகளை எழுத்திலாக்கிக் கொண்ட பின் அப்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை ஆளணியினரிடையே பகிரும் செயற்பாட்டை நிகழ்த்த வேண்டும். இதற்காக கூட்டமைப்பின் முக்கிய அங்கத்தவர்கள் ஒவ்வொருவரதும் பலமும், பலவீனமும் ஆராயப்பட்டு அவர்கள் எப் பணியில் விற்பன்னராக உள்ளனரோ அப்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு கையளிக்க முற்படும் போது தான் கூட்டமைப்பின் தலைமை ஒரு சவாலை எதிர்கொள்ள நேரிடும். அச்சவால் யாதெனில் பொறுப்புக்களுடன் அதிகாரங்களையும் பகிர வேண்டி ஏற்படும். அதிகாரப் பகிர்வு என்பது அதிகார வெறிகொண்ட எவராலும் செய்ய முடியாத விடயம் ஆகும். ஆனால் சனனாயகப் பண்புகளைக் கொண்ட ஓர் அமைப்பு தனது நீண்ட கால நலனுக்காக அதிகாரங்களைப் பகிர வேண்டியே இருக்கும். அதனிலும் முக்கியமாக தற்போது தமிழர்கள் எதிர்நோக்கியுள்ள வாழ்வாதாரமற்ற சூழலில் கூட்டமைப்பிற்குள் அதிபாரப் பகிர்வு என்பது இன்றியமையாததாகின்றது.

அடுத்த பலவீனமாக கூட்டமைப்பு எதிர்கொள்வது மதிநுட்ப வல்லுனர் ஒருவரை (Strategist) அவ்வமைப்பு தற்போதுவரை கொண்டிருக்காமையே.

நாம் ஏற்கனவே கலந்துரையாடிய போது பல்வேறு ஆளுமைகளைத் கூட்டமைப்பு தன்னகத்தே கொண்டிருப்பது அதன் பலம் எனப் பார்த்தோம். ஆனால் அவ்வாளுமைகளுள் மதிநுட்ப வல்லுனர் எவருமில்லாததாலேயே அதனைப் பலவீனமாகப் பார்க்க வேண்டியுள்ளது. மதிநுட்ப வல்லுனர்கள் என்போர் கூட்டமைப்பு எதிர்கொள்ளும் ஒவ்வொரு சவால்களையும் அக்காலத்திலுள்ள அக மற்றும் புறக் காரணிகளினைக் கருத்திற்கொண்டு எடுக்கக்கூடிய பல்வேறு சாத்தியமான (Feasibility) முடிவுகளைக் கண்டு சொல்லக் கூடிய ஆற்றல் மிகு அறிவுள்ளரோக் கருதும். இம் முடிவுகளிலிருந்து உன்னதமான (Optimum) முடிவினை மேற்கொள்ளும் பொறுப்பு கூட்டமைப்பின் மத்திய குழுவிற்கிருக்கும்.

இங்கு நான் ஒரு உதாரணத்தை உங்களுக்குத் தருவதன் ஊடாக ஒரு மதிநுட்ப வல்லுனரின் தேவை எந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

போர் உச்சக்கட்டத்தில் நகர்ந்து கொண்டிருந்த காலப் பகுதியில் திருமலைக் கடற்படைத் தளத்தில் இலங்கையின் முக்கிய பல்கழைக்கழகங்களிலிருந்து மதிநுட்பக் கல்வியியலாளர்கள் அழைக்கப்பட்டுத் தந்திரோபாயத் தீர்மானங்களை அவர்களே முன்மொழிந்திருத்தனர். எனவே கூட்டமைப்பின் வெற்றிக்கு ஓர் மதிநுட்பவியலாளரின் பங்களிப்பு இன்றியமையாததாய் உள்ளது.

எஞ்சிய பலவீனங்களை அடுத்தவாரம் வாசிப்போம்.



(மாயன்)

## சமயம் வளர்க்கும் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்

ஏதோ ஒரு சிறு உதவியை செய்து விட்டு தங்களை பெரிய கொடைவள்ளல்களாகக் காட்டிக்கொள்ளும் இவ்வுலகில் எங்கோ ஒரு மூலையில் தங்களால் இயன்ற உதவியை அமைதியாக சிலர் தாம் சார்ந்த சமூகத்தின் வளர்ச்சிக்காகச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படி சில நபர்களை கடந்த வாரம் மலைமுரசு சந்திக்க நேர்ந்தது.

சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் கடந்த 1994ம் ஆண்டில் இருந்து தொடர்ந்து இன்றுவரை வார இறுதி நாட்களில் இலவச அறநெறி பாடசாலை நடைபெற்று வருகின்றது. அவ் அறநெறிப்பாடசாலையில் இன்று சுமார் 150 சிறார்கள் சமயக் கல்வியை தொடர்கின்றனர்.

அவ் அறநெறிப்பாடசாலை ஒன்றும் அரசினதோ அல்லது தொண்டு நிறுவனங்களால் நடாத்தப்படுகின்றதோ என நீங்கள் எண்ணலாம். ஆனால் அதன் விடை, சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணிக்கராசா திருமகள், ஜெயராசா கோகிலவதனி, நி'ாந்தன் பூமகள், கஜேந்திரன் பத்மதர்'ினி, ரவிச்சந்திரன் வனஜா, பத்தமநாதன் சுஜித்தா ஆகியோரின் முயற்சியில் தான் இப்பாடசாலை இயங்குகிறது. இவ்வாசிரியர்கள் கடந்த 2011ம் ஆண்டுவரை தன்னார்வத் தொண்டர்களாக அற நெறிப் பாடசாலையை நடாத்தி வந்ததைக் கேட்கும் போது மெய்சிலிர்த்தது. தற்போதைய அதிபர் திரு.மகேஸ்வரன் அவர்களில் உதவியுடன் நடைபெற்று வரும் அறநெறிப் பாடசாலையின் தொடர்ந்தியக்கத்திற்கு முன்னைய அதிபர்கள் அனைவரும் உதவிபுரிந்துள்ளனர்.

அறநெறிப் பாடசாலையினூடாக சமய கல்வி மட்டும் அல்லாது சமயப் பெரியவர்கள் நினைவு தினங்கள், சமய அனுட்டான தினங்கள் ஆகியனவும் சிறப்பான முறையில் கொண்டாடப் படுகிறது.

இந்த உலகு அறநெறியில் மறைப் பெறுமதியில் சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையில் தங்கள் நேரத்தை ஒதுக்கி சமூகத்திற்கு அறநெறியையும் சமய அறிவையும் வழங்கும் இவர்களின் செயல் பெரிதும் மெச்சத் தக்கது.

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில் பிரதம குருக்கள் பிரம்ம்ஸ்ரீ .சோ . இரவிச்சந்திர குருக்கள் அவர்கள் அறநெறிப் பாடசாலைக்கான தன்னால் இயன்ற உதவிகளை செய்து வருகிறார். ஆனாலும் இவ் அறநெறிப் பாடசாலை சில பிரச்னைகளுக்கு முகம்கொடுத்து வருவதாக பாடசாலை ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். இப்பாடசாலைக்கு வரும் அநேகமான பிள்ளைகள் வறுமைக்கோட்டிற்குள் உள்ள குடும்பங்களைச் சேர்த்தவர்கள். அவர்களுக்குச் சிறிது உணவு வழக்கப் படுமானால் அம்மாணவர்கள் தங்களது அறநெறிக்கல்வியை தொடர உதவியாக இருக்கும். குறைந்தது ஒரு நாளுக்கு (வார இறுதிநாளில்) 500 ரூபா கிடைக்குமானால் தங்கள் வளங்களையும் பயன்படுத்தி மாணவர்களுக்கு உணவு வழங்க முடியும் என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

உண்டியல்களில் போடுவதும் அறநெறி அறிவை வளர்க்க உதவுவதும் ஆண்டவனுக்குச் செய்யும் நன்றிக் கடன் தானே! நம் சமூகத்திற்கு ஏதோ செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற இவ் அறநெறி ஆசிரியர்களுடன் இணைந்து நாமும் அம்மாணவர்களுக்கு ஏதாவது உதவி செய்தால் என்ன?

(செந்தூரன் - ஸ்ரீ)

வீரகத்தி பிள்ளையார் கோவில் - திருகோணமலை




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செல்போன் பயன்படுத்துவதால் செவிட்டுத் தன்மை ஏற்படுமா?

(நன்றி முகவெளி)



உறுதியாக செவிட்டுத் தன்மை ஏற்படும் என்று மருத்துவ வல்லுநர்கள் கூறுகிறார்கள். சாதாரணமாக நாம் கேட்கும் திறனின் அளவு 70 டெசிபல் முதல் 75 டெசிபல் வரைதான். இதற்கு அதிகமாக ஒலியின் அளவு ஆகும்போது கேட்கும் திறனில் நிச்சயம் பாதிப்பு ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

நுட்பமான உறுப்புகளில் காதும் ஒன்று. காது கேட்கும் திறன் பாதிப்படையாமல் இருக்க சராசரி ஒலியின் அளவைவிட அதிகமாகும்போது குறைகிறது. அதிகபட்ச உயர்ந்த அளவு 90 டெசிபல் ஒலி அளவுகள் வரை கேட்கும் திறனைத் தாங்குகிறது காதுகள். இதற்கு மேல் அதிகரித்தால் காது "கேக்காது" ஆகவிடும்.

இந்த அளவுகளையே தொடர்ந்து இடைவிடாமல் கேட்பதால் காது பாதிப்புக்கு உள்ளாகும். அதிகபட்சமாக 20 நிமிடங்கள் வரை தொடர்ந்து செல்போன் பேசலாம்.

அரைமணி நேரத்திற்கும் அதிகமாக காதிலிருந்து செல்போனை எடுக்காமல் பேசுவதால் காதில் பிரச்னைகள் உருவாக ஆரம்பிக்கும். கூடவே கதிர்வீச்சுத் தாக்கமும் ஏற்படுவதால் உடலுக்கு கேடு ஏற்படுவதை தடுக்க முடியாது.

செல்போன் மூலம் நாம் கேட்கும் ஒலியின் அளவு 90-100 டெசிபலாக இருக்கும். இது காதுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய அளவு ஆகும். அதிக ஒலியளவைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருப்பதால் காதின் கேட்கும் திறன் விரைவிலேயே குறைந்துவிடும்.

அதிக அதிர்வலைகளை ஏற்படுத்துகிற செல்போனை நாம் காதிலியே வைத்துப் பேசுவதால் காதில் உள்ள நுண்ணிய நரம்புகள் பாதிப்புக்கு உள்ளாகிறது. செல்போனுக்கு டவர் அலைவரிசை சீராக இல்லாமல் விட்டு விட்டு கிடைப்பதாலும், கதிர்வீச்சின் அளவில் ஏற்ற இறக்கம் இருப்பதாலும் காதின் மிக நுண்ணிய நரம்புகள் பாதிக்கப்படலாம். இதனால் காது கேட்கும் திறன் குறைகிறது.

இதற்கு மாற்றுவழி என்ன?

செல்போனை தூர வைத்துப் பேசலாம். உயனௌ குசநந உபயோகிக் கலாம்.. கூடுமானவரை அதிக நேரம் செல்போன் உபயோகிப்பதை தவிர்க்கலாம். எல்லாம் நம்மிடமே உள்ளது. உங்களுடைய காதுகள் நன்றாக கேட்பதற்கும், கேட்காதிருப்பதற்கும் நீங்களே காரணமாக இருப்பீர்கள். முடிந்தவரை செல்போன் தொடர்ச்சியாக மணிக்கணக்கில் பேசுவதை தவிருங்கள்.. காது கேட்கும் தன்மையை இழக்காமல் இருங்கள்.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2012 டிசெம்பர் நேர அட்டவணை

| | திகதி | முற்பகல் | | நேரம் | பிற்பகல் | | நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2012 டிசெம்பர் 11 செவ்வாய் | 11 பௌத்த சமயம்<br>12 சைவ நெறி<br>14 கத்தோலிக்க சமயம்<br>15 கிறிஸ்தவம்<br>16 இஸ்லாம் | வினாத்தாள் I,II | 0830 - 1130 | | | |
| 2 | 2012 டிசெம்பர் 12 புதன் | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் | வினாத்தாள் I,II | 0830 - 1130 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் | வினாத்தாள் III | 1230 - 1430 |
| 3 | 2012 டிசெம்பர் 13 வியாழன் | 33 வரலாறு | வினாத்தாள் II | 0830 - 1130 | 33 வரலாறு | வினாத்தாள் I | 1230 - 1330 |
| 4 | 2012 டிசெம்பர் 14 வெள்ளி | 80 தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பவியலும்<br>81 விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும்<br>82 கடற்றொழிலும் உணவுத் தொழில்நுட்பவியலும்<br>83 ஆக்கத்திறனும் தொழில்நுட்பவியலும்<br>84 அருங்கலை<br>85 மனைப்பொருளியல்<br>86 சுகாதாரமும் உடற்கல்வியும்<br>87 தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்<br>92 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்)<br>93 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்)<br>94 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்) | வினாத்தாள் I,II | 0830 - 1130 | | | |
| 5 | 2012 டிசெம்பர் 15 சனி | 34 விஞ்ஞானம் | வினாத்தாள் II | 0830 - 1130 | 34 விஞ்ஞானம் | வினாத்தாள் I | 1230 - 1330 |
| | 2012 டிசெம்பர் 16 ஞாயிறு | | | | | | |
| 6 | 2012 டிசெம்பர் 17 திங்கள் | 32 கணிதம் | வினாத்தாள் I | 0830 - 1030 | 32 கணிதம் | வினாத்தாள் II | 1230 - 1500 |
| 7 | 2012 டிசெம்பர் 18 செவ்வாய் | 40 சங்கீதம் (கீழைத்தேயம்)<br>41 சங்கீதம் (மேலைத்தேயம்)<br>42 சங்கீதம் (கர்நாடகம்)<br>44 நடனம் (சுதேச)<br>45 நடனம் (பரதம்) | வினாத்தாள் I,II | 0830 - 1130 | 46 இலக்கிய நயம் ஆங்கிலம்<br>47 இலக்கிய நயம் சிங்களம்<br>48 இலக்கிய நயம் தமிழ்<br>49 இலக்கிய நயம் அரபு<br>50 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)<br>51 நாடகமும் அரங்கியலும் (தமிழ்)<br>52 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) | வினாத்தாள் I,II | 1230 - 1530 |
| | | 43 சித்திரம் | வினாத்தாள் I<br>வினாத்தாள் III | 0830 - 0930<br>0945 - 1145 | 43 சித்திரம் | வினாத்தாள் II | 1315 - 1515 |
| 8 | 2012 டிசெம்பர் 19 புதன் | 31 ஆங்கில மொழி | வினாத்தாள் I<br>வினாத்தாள் II | 0830 - 0930<br>0945 - 1145 | | | |
| 9 | 2012 டிசெம்பர் 20 வியாழன் | 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்<br>61 புவியியல்<br>62 குடியியல் கல்வி மற்றும் ஆட்சி நிர்வாகம்<br>63 முயற்சியாண்மைக் கற்கை<br>64 இரண்டாம் மொழி (சிங்களம்)<br>65 இரண்டாம் மொழி (தமிழ்)<br>66 பாளி<br>67 சமஸ்கிருதம்<br>68 பிரெஞ்சு<br>69 ஜேர்மன்<br>70 ஹிந்தி<br>71 ஜப்பான்<br>72 அரபு | வினாத்தாள் I,II | 0830 - 1130 | | | |

கவனிக்கவும்: இப்பரீட்சையின் எப்பாடத்திற்காவது கணிப்பான்களையும் அழிமையையும் (Correcting Fluid) உபயோகிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் மண்டபத்தினுள் எடுத்துவருதலும் குற்றமாகும்.

6/4/2012
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2012.10.08
C:\Documents and Settings\user\Desktop\T.A\6-4-06-2012 Time Table.doc

டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

நன்றி: www.doenets.lk

முரசின்
# உலக வலம்

## அமெரிக்க விமானப்படையின் இலங்கைத் தமிழர் மரணம்

ஆப்கானில் நிகழ்ந்த விபத்தொன்றில் சுரேஸ் என். ஏ. கிரவுஸ் என்ற இலங்கைத் தமிழ் விமானி மரணமாகியுள்ளார். பிளக்கௌக் ரக தாக்குதல் உலங்கு வானூர்தி விமானியான சுரேஸ் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.



சுரேஸ் கடந்த ஐந்து ஆண்டுகளாக அமெரிக்க விமானப் படையின் விமானியாகத் தொழிலாற்றி வந்ததுடன் அமெரிக்க விமானப் படையால் வழங்கப்படும் பல கௌரவம் மிக்க



பதக்கங்களையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இராணுவ சேவைக்கான பதக்கம், தேசிய பாதுகாப்புச் சேவைக்கான பதக்கம், நேட்டோ படையணியின் இராணுவப் பதக்கம் போன்றவற்றை அவர் இக் குறுகிய காலத்தினுள் பெற்றிருந்தார்.

கடந்த எட்டாம் மாதம் அவர் பயணம் செய்த உலங்குவானூர்தி விபத்தடைந்த போது அவருடன் பயணம் செய்த ஏனைய மூன்று படையதிகாரிகளும் மரணமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மரணமடையும் போது சுரேஸ் 29 அகவைகளைத் தொட்டிருந்தார். அவர் ஆப்கானிஸ்தானில் அமைதிகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

## சிரிய சுதந்திரப்படையில் முதல் பெண் தளபதி



சிரிய அரச படைகளுக்கு எதிராகப் போரிடும் சுதந்திரச் சிரிய இராணுவத்துடன் இணைந்து போரிடும் விருப்பத்தை முதலாவது பெண் இராணுவ ஜெனரலான சுபைதா அல் மீகி வெளியிட்டுள்ளார். சிரிய அரச அதிபர் பசீர் அல் அசாத்திடம் இராணுவ ஜெனராலாகப் பணியாற்றிய மீகி இராணுவ தேர்வாணைய இயக்குனராக பிபிலியா எனும் பிரதேசத்தில் நிலைப் படுத்தப்பட்டிருந்தார்.

இப்பிரதேசத்தின் பெரும் பகுதிகளை கடுமையான போரின் பின் அரச படைகளிடமிருந்து சுதந்திரப் படைகள் மீட்டுள்ள இந்நிலையில் மீகி தனது விருப்பத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தார்.

கடந்த வருடம் பத்தாம் மாதத்திலேயே தாம் சுதந்திர இராணுவத்தில் இணைவது தொடர்பான தீர்மானத்தை எடுத்திருந்ததாகவும், அவ்வாறு தான் எடுத்திருந்த முடிவைத் தோராணமாகத் தெரிந்து கொண்ட அரச இராணுவப் புலனாண்வாளர்கள் தன்னைச் சுற்றி வந்ததால் தன்னால் அம்முடிவை வெளியே தெரியப்படுத்த முடியாதிருந்ததாகக் குறிப்பிட்ட அவர், சுதந்திரப் படையின் வருகை தமது நகரத்திற்கு அருகில் வந்தபோதே வெளிப்படுத்த முடிந்ததாகவும் தெரிவித்துள்ளார்

(ஸ்ரீ)

திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்
விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புக்கள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்
போன்றவை இடம்பெற வேண்டுமா?
தொடர்புகளுக்கு
அலுவலகம்-159A,2nd floor,Sea view Road,Trincomalee. 077 018 0218
விளம்பர முகவர்- 58,Vidyalayam Road,Trincomalee. 077 366 3103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமெரிக்க சனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் அவர்கள் தனது மகனின் பள்ளி ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தை முகவெளி யின் ஊடாக நண்பர் ஒருவர் பகிர்ந்து கொண்டார். எமது பெற்றோர் மறந்த பல விடயங்களை இத் தபால் மீள் ஞாபகம் செய்கின்றது. அறிவுக்கும் கல்விக்கும் இடையிலான வேறுபாட்டை மிகச்சரியாக புரிய வைக்கும் எழுத்துக்களாகவே இதை நாம் வாசிக்கின்றோம்.

- ஆசிரியர் -

# மரியாதைக்குரிய ஆசிரியர் அவர்களே,

எனது மகன், அனைத்து மனிதர்களும் நியாயமானவர்கள் அல்ல, அனைத்து மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனாலும், மனிதர்களில் கயவன் இருப்பது போல ஒரு பின்பற்றத் தக்கவரும் இருக்கிறார் என்பதையும், ஒவ்வொரு தன்னல அரசியல்வாதி இருப்பது போன்று ஓர்அர்ப்பணிப்பு மிக்க தலைவரும் இருக்கிறார் என்பதையும், ஒவ்வொரு பகைவனைப் போல ஒரு நண்பரும் இருக்கிறார் என்பதையும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

பின்வருவதை அவன் கற்றுக் கொள்ள நாளாகும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும், உழைத்துச் சம்பாதித்த ஒரு டாலர், உழைக்காது பெற்ற ஐந்து டாலரைவிட அதிக மதிப்புடையது என்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவனுக்குத் தோல்வியை ஏற்றுக் கொள்ளவும், வெற்றியை அனுபவிக்கவும் கற்றுக் கொடுங்கள். அவனுக்குப் பொறாமைக் குணம் வந்து விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

மவுனமாக ரசித்துச் சிரிப்பதன் இரகசியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒளிவது கோழைத்தனம் என்பதைப் புரிய வையுங்கள். **புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள்.** அதே வேளையில், இயற்கையின் அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

வானில் பறக்கும் பறவைகளின் புதிர் மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும், பசுமையான மலையடிவார மலர்களின் வனப்பையும் ரசிப்பதற்கும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

ஏமாற்றுவதை விடவும், தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதைப் பள்ளியில் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமரிசித்தாலும், தனது சுய சிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டு குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

கும்பலோடு கும்பலாய்க் கரைந்து போய்விடாமல் எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயல்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவி சாய்க்க வேண்டும். எனினும் உண்மை என்னும் சல்லடையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், புகழ்ச்சியைக் கேட்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சிகொடுங்கள்.

தனது செயல்திறனுக்கும், அறிவார்ந்த ஆற்றலுக்கும் மிக அதிகஊதியம் கோரும் சாமர்த்தியம் அவனுக்கு வேண்டும். ஆனால், தனது இதயத்திற்கும், தனது ஆன்மா விற்கும் விலை பேசுபவர்களை அவன் ஒரு போதும் அனுமதிக்க கூடாது. பெருங் கும்பல் திரண்டு வந்துகூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்டிப் போராடுவதற்குஅவனுக்கு நம்பிக்கை கொடுங்கள்.

அவனை அன்போடு நடத்துங்கள். ஆனால் அதிக செல்லம் காட்டி மற்றவர்களைச் சார்ந்திருக்க வைக்க வேண்டாம். ஏனென்றால் கடுமையான தீயில் காய்ச்சப்பட்டஇரும்பு மட்டும்தான் பயன்மிக்கதாக மாறுகிறது.

தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மவுனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

இது ஒருமிகப் பெரிய பட்டியல் தான்.

இதில் உங்களுக்குச்சாத்திய மானதையெல்லாம் நீங்கள் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவன் மிக நல்லவன் , எனது அன்பு மகன்.

# விடுப்பு

குமார் குமார் லைட் அடி
கோழிக் கூட்டுக்கு லைட் அடி
அப்பாராவ் -அட குஞ்சு இது அம்மம்மா 5 வயசுல சொல்லித்தந்தது. இதேன் இப்ப?
சுப்பாராவ் - விசயம் தெரியாத மடையா கிட்டடில களவு போனதாமே பெரிய ரோட்டு பாடசாலை ஒன்டில அந்தப் பாடசாலை அதிபர் இப்ப இரவிரவா கள்ளன பிடிக்க பாடசாலைக்குள் லைட் அடிச்சு தீரியிரார்ராமே உனக்கு தெரியாதா?
அப்பாராவ் - தெரியும் தெரியும் அவர்
சுப்பாராவ் - உஷ் உஷ் ஷசொல்லாதே யாரும் கேட்டால் நல்லோர்கள் தாங்க மாட்டார் !




## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. ஆந்தை அலறும் என்பது போல யானை?
   1. கனைக்கும் 2. பிளிறும் 3. உறுமும்

2. எலுமிச்சையின் இளையது கன்று என்பது போல தென்னையின் இளையது? 1. பிள்ளை 2. குட்டி 3. கன்று

3. ஆதிகால மக்கள் இறைச்சியை நீண்ட நாட்கள் பேணிப் பாதுகாத்த முறைகளில் ஒன்று?
   1. குளிரூட்டியில் வைத்தல் 2. தேனில் இடல் 3. மண்ணினுள் புதைத்து வைத்தல்

4. இரவில் மலரும் பூக்களினது நறுமணம் அதிகமாக இருப்பதற்கான காரணம் யாது?
   1. நிலவொளி அதிகமாக இருப்பதால் 2. வண்டுகளைக் கவர்வதற்கு 3. தாம் மலருவதைத் தெரிவிப்பதற்கு

5. வீட்டுத் தோட்டத்தின் மூலம் கிடைக்கும் பயன் அல்லாதது எது?
   1. நச்சுத்தன்மையற்ற காய்கறிகளைப் பெறலாம் 2. அதிக விளைச்சலைப் பெற முடியும் 3. உடன் காய்கறி பெறலாம்

6. பப்பாசி இலையின் வடிவத்தை ஒத்த இலை அல்லாதது எது?
   1. ஈரப்பலா 2. மரவள்ளி 3. அகத்தி

7. சிறிய தாவரமொன்றை சிரட்டையினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தால் தாவரத்தின் இலை வெளிறி மஞ்சள் நிறமடையும். இதற்கு காரணமாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
   1. பச்சையம் உற்பத்தி செய்யப்படாமை 2. மஞ்சயம் உற்பத்தி செய்யப்படுதல் 3. சூரிய ஒளி கிடைக்காமை

8. நீரில் மிதக்கக்கூடிய பொருள் எது?
   1. தக்கை 2. சீனி 3. உப்பு

9. பின்வரும் வாக்கியங்களை கருத்துமிக்கதாக ஒழுங்குபடுத்திக் கூறுவது?
   அ. அப்பா பரிசு வாங்கித் தந்தார்.
   ஆ. பரீட்சைக்குத் தோற்றினேன்.
   இ. விடாமுயற்சி வெற்றி தரும் என ஆசிரியர்கள் பாராட்டினர்.
   ஈ. மிகவும் கடினமாகப் படித்தேன்.
   உ. பரீட்சையில் அதியுயர் சித்தியெய்தினேன்.
   1. அஇஉஈஆ 2. ஈஆஉஅஇ 3. ஈஆஉஇஅ

10. கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
    1. 5 பேர் 2. 6 பேர் 3. 7 பேர்

11. 19 3 8 15 15 12 எனும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய ஆங்கிலச் சொல் எது?
    1. school 2. spoon 3. front

12. ஒரு வகுப்பறையில் 35 மாணவர்கள் இருக்கலாம் எனில் 96 மாணவர்கள் இருப்பதற்கு தேவையான வகுப்பறைகளின் எண்ணிக்கை யாது?
    1. 3 2. 2 3. 4

13. பிற்பகல் இரண்டு கழிந்து ஐம்பத்தொரு நிமிடம் என்பதை சரியாக நியமவடிவில் குறிப்பது எது?
    1. 14 : 51 2. 14.51 3. 02 : 51

14. வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை தெரிக.
    1497 = 1000 + 299 + ______ - 35
    1. 163 2. 33 3. 233

15. கிரிக்கட் வீரரொருவர் 4 ஓட்டங்களில் 8உம், 6 ஓட்டங்களில் 12உம் பெற்றார். எனின் அவர் பெற்ற ஓட்டங்களின் மொத்த எண்ணிக்கையாது?
    1. 104 2. 96 3. 20

16. பாபு சதுவின் தந்தையாவார். குமார் பாபுவின் அண்ணணாவார். பவானி சதுவின் தங்கையாவார். பவானியும் குமாரும் சந்திக்கும் போது பவானி என்ன முறையைக் கொண்டு குமாரை அழைப்பாள்?
    1. சித்தப்பா 2. பெரியப்பா 3. மாமா

17. 2000 ஆம் ஆண்டு லீப் வருடமாகும். 2001ம் ஆண்டின் டிசம்பர் 31ந் திகதி திங்கட்கிழமை எனில், 2009 ஆம் ஆண்டின் டிசம்பர் 31ந் திகதி என்ன கிழமையாகவிருக்கும்?
    1. வியாழன் 2. செவ்வாய் 3. புதன்

18. ஒரு நகரத்தில் ஆண்கள் பாடசாலை, பெண்கள் பாடசாலை, கலவன் பாடசாலைகள் என மொத்தமாக 35 பாடசாலைகள் உள்ளன. அதில் 21 பாடசாலைகளில் ஆண் பிள்ளைகளும் 24 பாடசாலைகளில் பெண் பிள்ளைகளும் கற்கின்றனர் எனின், கலவன் பாடசாலைகள் எத்தனை உண்டு?
    1. 10 2. 12 3. 8

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்று புதிய தலைமுறையினர் முன்னேற வேண்டும்.

**-இளம் தொழிலதிபர் கலைச் செல்வன்-**



மிகுந்த முயற்சியின் பயனாக சாதனையாளராக மிளிரும் ஒவ்வொரு நபர்களையும் இளம் சமுதாயத்தினருக்கு முன்மாதிரியாக காட்டும் வகையில் செவ்வி காண்பதில் மலைமுரசு பெருமையடைகிறது. அதனது முதற்கட்டமாக, தன் ஆற்றலையும் தனக்கு கிடைத்த சந்தர்பங்களையும் சரிவரப் பயன்படுத்தி மிளிர்கின்ற ஒரு இளம் தொழிலதிபரை, முயற்சியாளனை, திருக்கோணமலை வர்த்தகச் சம்மேளனத்தின் தலைவருமான திரு. கலைச்செல்வனை செவ்வி கண்ட போது,

**கேள்வி :- நீங்கள் வணிகத்துறையை தேர்ந்தெடுத்தமைக்கான காரணம் என்ன?**

தற்போதைய காலக்கட்டத்தில் ஏனைய துறைகளுள் ஒன்றில் முன்னேறுவதைக் காட்டிலும் நிரந்தர வருமானத்தை பெற்றுத்தரக் கூடியதான சுயதொழில் ஒன்றை மேற்கொண்டு முன்னேறுவது சிறந்தது என கருதினேன். எனவே வணிகத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது.எனக்கு தகவல்தொழில் நுட்பம், சந்தைப்படுத்தல் என்பவற்றில் ஈடுபாடு இருந்தது அவற்றை கற்று வணிகத்துறையில் எனது பயணத்தை தொடர்ந்தேன்.

**கேள்வி :- இன்று திருமலையில் ஒரு இளம் தொழிலதிபராக உள்ளமை பற்றி எவ்வாறாக உணர்கிறீர்கள்?**

மிகுந்த சந்தோஷமாக உள்ளது. இன்று நான் திருகோணமலை வர்த்தக சம்மேளனத்தினுடைய தலைவராகவும் உள்ளேன். பல்வேறுபட்டவர்களது தொடர்புகளும் உள்ளன.

சமூகத்தில் சிறந்த ஒரு வரவேற்பும் மதிப்பும் இருக்கிறது பல்வேறு அனுபவங்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

**கேள்வி :- எவ்வாறான சவால்களை எதிர்கொள்கிறீர்கள்?**

வர்த்தகத்துறையை பொறுத்தவரை பலரும் இதில் ஈடுபடுகின்றனர். திருமலையில் பல்வேறு பட்ட தொழில் நிறுவனங்கள் உள்ளன. அவை பதிவு செய்யப்பட்டனவாயும் பதிவு செய்யப்படாதவைகளாகவும் உள்ளன. அவை பல்வேறுபட்டதான உத்திகளையும் கையாளுகின்றன. எனவே போடடித்தன்மை அதிகமாகவே உள்ளது. இதனால் குறிப்பிட்டு சொல்வதற்கன்றி பல்வேறு விதமாக சவால்களை எதிர்கொள்கின்றேன்.

**கேள்வி :- உங்களுடைய முன்னேற்றத்திற்கு உந்துதலாக செயற்பட்டவர் யார்?**

எனக்கு இந்த துறையில் முன்னேற என் குடும்பப்பின்னணியோ ஏனைய அம்சங்களோ இத்துறை சார்ந்து அமையவில்லை. நான் யாரையும் முன்மாதிரியாக கொண்டு முன்னேறவும் இல்லை. என் முன்னேற்றத்திற்கு எனக்குகிடைத்த சந்தர்ப்பங்களை சிறப்பாக பயன்படுத்தியதும் கடின உழைப்புமே காரணம் என கருதுகிறேன். முன்னேற்றத்தின் பால் இன்றுவரையும் நள்ளிரவு 12.00 மணிக்கும் மேலாக என் செயற்பாடுகளுக்காக நேரத்தை செலவிடுகிறேன். இவ்வாறான ஒரு முயற்சி என் முன்னேற்றத்திற்கு காரணமாகியது. நான் க.பொ.த சாதாரண தரம் வரையான கல்வியை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலத்திலும் தொடர்ந்து உயர்தரத்தை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியிலும் கற்றேன். அந்தவகையில் இந்துக்கல்லூரி வாழ்க்கை என்னால் மறக்கமுடியாது. அதில் பெற்ற அனுபவங்கள் என் வெற்றிக்கு துணைபுரிந்தன இந்துக்கல்லூரியை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

**கேள்வி :- உங்கள் எதிர்காலத்திட்டம் என்ன?**

என்னுடைய தொழிற்துறையில் பல்வேறு முன்னேற்றங்களையும், வெற்றிகளையும் ஈட்டுவது என் திட்டமாக உள்ளது.அது தவிர சமூக சேவைகளிலும் ஆர்வம் காட்டிவருகிறேன். தகவல் தொழினுட்ப கற்கையை போதிக்கும் முகமாக “ENET COILEGE” எனும் நிறுவகத்தையும் நடாத்தி வருகிறேன்.அதில் சில வறிய மாணவர்களுக்கு இலவசமாக தகவல்தொழினுட்பத்தை பயிற்றுவிக்கிறேன்.

– பத்மவி –

## சிபில் கார்த்திகேசு:



சிபில் கார்த்திகேசு (1899-1948) மலேசியாவில் புகழ்பெற்ற ஒரு தமிழ்ப் பெண்மணி. இரண்டாம் உலகப் போரின் போது பல நூறு சீனர்களின் உயிர்களைக் காப்பாற்றியவர். ஜப்பானியப் படையினரை எதிர்த்துப் போராடியவர். மலேசிய நட்பு படைகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டவர். இங்கிலாந்து மற்றும் காமன்வெல்த் நாடுகளின் இரண்டாவது உயரிய விருதான ஜோர்ஜ் பதக்கம் பெற்றவர். மலேசியாவில் உள்ள சீனர் சமூகம் இவரை ஒரு தியாகி என்று போற்றுகின்றது. மலேசிய ஈப்போ மாநகரின் முக்கிய சாலைக்கு இவருடைய பெயர் இடப்பட்டு உள்ளது.

நன்றி: விக்கிபீடியா

## இவ்வாரம் சோ.ப வின் ஆபிரிக்க கவிதைகள் தொகுப்பிலிருந்து...

### நீக்றோ நாடோடி
(முதுபெருங் கவிஞர் அய்மே சேசாருக்கு)

குளிர்ந்த வடமேற்காற்றால் சிதறக்கப்பட்ட
பழைய சிதைந்த கனவைப்போல
நீ நடந்தாய்
உப்பு வீதிகளுடும்
சேற்று ஒழுங்கைகளுடும்
வலியை ஏற்றபடி
நீ நடந்தாய்
உன்னை
கினியிலிருந்து பிய்த்தெடுத்து
கப்பல்கள்
குருதிக் கொடிகளாக
தீவுதோறும் நாட்ட
நீ நடந்தாய்

வானத்தை வாசித்தபடி நீ கிடந்த
அந்நிய இடுகாட்டுக்கு
உன்
நைந்த ஆடையின் முட்களைக்
கொண்டு சென்றாயா?

உன் கண்களில்
ஆற்றாமைக் கரங்களும் கூனங்களையும்
பருத்தியும் சுரங்கங்களும் கொணரவல்ல
விடியலையும் காண்கிறேன்
மறக்கப்பட்ட சுந்தியாதா.
பட்டும் நெருப்பும் பற்றிய கதைகளோடு
சமுத்திரத் தளத்தில் புதையுண்ட
தோல்வியறியாத சாகன்
ஆகியோரைக் காண்கிறேன்.

நகரங்களின் ஆழத்தில் எழும்
அச்சத்தை தணிக்க
கொலை வெளியோடு ஒலிக்கும்
ஊதுகுழல் இசையும்
பனிபடர்ந்த நிலப்பரப்பில்
திறக்கும் வயிறுகளையும்
எல்லாவற்றையும் காண்கிறேன்
யாரும் வாழக்கூடிய
அறியப்படாத
மணங்கமழும் நாடுகளின்
அரிவிவெட்டும்
முதிய நெற்றியில் புலர்ந்த வைகறைக்கு
என்ன நடந்தது?
உன்
ஒளிவீசும் இரத்தினங்களுக்கும்
பொன் வாள்களுக்கும்
என்ன நடந்தது?
நீயோ இந்த அழுக்குச் சிறைக்கூடத்தில்

மற்றவர்களின் சிரிப்புக்கும்
குரூரப்பசிக்கும்
பணத்துக்கும் பலியாய்!
உன்னை ஞெழெற நாவந என்றார்களாம்!
என்ன விசித்திரம்.
தங்கள் சொற்றொடரால் பூரித்த!

ஆனால்
உன் கண்ணீரில் மூழ்கிய அக்காலைப் பொழுதில்
புனித மணி முடிகள் மட்கிய அவ்வேளை
என் முகில்களிடையே இருந்ததைத் தவிர

இரவின் வேதனைகள்
நகரமுடியாத காயங்கள்
பயங்கர முகாம்களில்
கல்லாய் இறுகிய கந்தைகள்
குருதிதோய்ந்த மண்
எனக்கு
அந்த நாளும் மற்ற நாள்கள் போலவே
நான் சன்னி பிடித்து
ஷியேபா: பாடினேன்.

ஓ. புதைக்கப்பட்ட பயிர்களே
இழந்த விதைகளே
என் வழிகாட்டி நீக்ரோவே
என் குறுகிய இருதயத்தை மன்னிப்பாய்
பின்போடப்பட்ட வெற்றிகள்

கைவிடப்பட்ட ஆயுதங்கள்
பொறுமைக் களியாட்டம் இறந்து விட்டது
சூறாவெளியைத் தீட்டுகிறேன். எதிர்கால உழவுசால்களுக்காக
உனக்காக
கானாவையும் திம்புக்துவையும் மீளப்படைப்போம்ஞு
குடிசைகள் தோறும்
வலிய உலக்கைகளில் லயத்துக்கு
கிற்றார் இசை தாவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### அரசின் முதலீட்டுத் திட்டங்களால் அபிவிருத்தி மூட்டப்படுகிறது.

தேசிய உட்கட்டுமானத் திட்டங்களில் மேற்கொள்ளப்படும் அரசின் முதலீடுகளால் பொருளாதார அபிவிருத்தி மூட்டப்படுகிறது. இவ்வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 152,401 மில்லியன்கள் வீதி, பாலம், மின்வலு, துறைமுகம், நீர்ப்பாசனம் போன்ற துறைகளின் உட்கட்டுமான விருத்திக்கு செலவிடப்பட்டுள்ளது.

இந்நிதி அபிவிருத்தி திட்டங்களான கமநெகும, மகநெகும, உதுரு வசந்தய, நெகென கிர நவோதய போன்றவற்றினூடாக பாய்ச்சப்பட்டுள்ளது.

### வெளிநாட்டவரின் பணத்தாள்களின் மீது கவனமாய் இருங்கள்.

வெளிநாட்டவர்கள் மாற்றக்கொண்டுவரும் பணத்தாள்களை மிகக் கவனமாக் கையாளுமாறு பொலீஸ் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அண்மையில் மொசாம்பத்திலிருந்து வந்த அந்நாட்டு பிரஜை பம்பலபிட்டியிலுள்ள பணமாற்றல் நிலையத்திற்கு வழங்கிய தாள்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தாள்களின் மீது சந்தேகம் கொண்ட அப்பணப்பரிமாற்று நிலைய அலுவலகர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து குற்றப்புலனாய்வுத் துறையினர் சடுதியாக விரைந்து அவ்வெளிநாட்டவரை கைது செய்துள்ளனர்.

### ஆஸியின் பா.உ இலங்கை க.ப வைப் பாராட்டினார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகளைத் தடுப்பதில் இலங்கை கடற்படை சிறப்பாக செயற்படுவதாக ஆஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் பாராட்டினார். தனது தனிப்பட்ட பதிப்பியில் (blog) பாராளுமன்ற உறுப்பினர் டொன் ரண்டால் இப்பாராட்டை எழுதியுள்ளார். தனது இலங்கை வருகையின் போது தான் பெருமளவு சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் கலந்துரையாடியதாகவும் அதன்போது அவர்கள் ஏன் உண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு பயணம் செய்கிறார்கள் என்பதை தன்னிடம் கூறியதாகவும் அவர் மேலும் எழுதியுள்ளார்.

### மீள்குடியேற்றம் சம்பந்தமாய் பொய்ப்படங்கள் – முல்லை அரசஅதிபர்

வெகுசனத் தொடர்பூடகங்கள் சிலவற்றுடன் சில தமிழ் அரசியல்வாதிகளால் முல்லைத்தீவு மீள்குடியேற்றம் சம்பந்தமாய் பொய்ப்படங்களே காட்டப்பட்டு வருவதாக அம்மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் தெரிவித்தார். இறுதியாக மீள்குடியேற்றப்பட்ட 165 குடும்பங்கள் தொடர்பாக வெளியிடப்படும் கூற்றுக்கள் அனைத்தும் பொய்யானவை என்று அவர் தெரிவித்தார். இக்குடும்பங்கள் விசப்பூச்சிகளும், பாம்புகளும் நிறைந்த காட்டுத் துண்டொன்றில் கைவிடப்பட்டுள்ளதாக வெளியான செய்தியொன்றில் எவ்வித உண்மையும் இல்லையென்று குறிப்பிட்ட அவர் மீள் குடியேற்ற அமைச்சால் சூரியபுரம் மாதிரிக் கிராமத்தில் 50 வீடுகளை அமைக்கும் பணி, வீடொன்றிற்கு ரூபா 775,000 செலவில் இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### திவி நெகும சட்டம் – அபிவிருத்தியின் ஆணி வேர்.

நீர் வழங்கும் வடிகாலமைச்சர் தினேஸ் குணவர்த்தன தனது கூற்றில் திவி நெகும சட்டம் அபிவிருத்தியின் ஆணிவேர் என்று தெரிவித்துள்ளார். இச்சட்டம் வறுமையொழிப்பையும், சமூக மேம்பாட்டையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்றும் கூறினார்.

### இலங்கைக்கு மேலும் பல உல்லாச விடுதி சங்கிலித் தொகுதிகள்

இலங்கையில் ஏற்கனவே உள்ள உல்லாச விடுதிச் சங்கிலித் தொகுதிகளுக்கு மேலதிகமாக ஹயாட் ஏஜென்சி உல்லாச விடுதித் தொகுதியும் தனது உல்லாச விடுதியொன்றை இலங்கையில் திறக்கவுள்ளது. 2014ல் இவ் உல்லாச தொகுதி கட்டிமுடிக்கப்படும். ஏற்கனவே இலங்கையில் சாங்கிசி - லா, மாரியட், ஷெராட்டன், சன்சிட்டி போன்ற உல்லாச விடுதிச் சங்கிலித் தொகுதிகள் இலங்கையில் தமது தொழிலை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கையெழுத்துக் களவு மத்திய மாகாண முதலமைச்சர் அலரல்

பெருமளவு ஆவணங்கள் கள்ளக் கையெழுத்துடன் அமைச்சுக்களை' விட்டு வெளிச்செல்வதாகவும் அவற்றைத் தடுக்கும் முனைப்புடன் அனைத்து அரசியல் மற்றும் அரச அலுவலகர்கள் செயற்பட வேண்டும் எனவும் மத்திய மாகாண முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். அண்மையில் மத்திய மாகாண கல்வி அமைச்சரின் கள்ளக் கையெழுத்தை இரு தமிழாசிரியர்கள் இட்டுள்ளது கண்:பிடிக்கப்பட்டுள்ளது.

## The Sunday Leader

### வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை – த.தே.கூ அரசின் மீது குற்றச்சாட்டு

இந்தியாவிற்கு அண்மையில் விசயம் செய்து திரும்பிய த.தே.கூ தலைவர் அழைத்த பத்திரிகையாளர் சந்திப்பில் இலங்கை அரசு தான் வாக்குறுதியளித்த எவற்றையும் நிறைவேற்றவில்லை என தெரிவித்துள்ளார். அரசு இந்தியாவிற்கு 13ம் திருத்தச் சட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும் என்று அளித்த வாக்குறுதியையே நிறைவேற்றத் தவறிவிட்டது எனத் தெரிவித்த அவர் இதேபோல சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளையும் இலங்கை அரசு தவற விட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

### சீனாவும் இரஸ்யாவுமே பொறுப்பு – மனிதவுரிமைக் கண்காணிப்பகம்

நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் மனிதவுரிமைக் கண்காணிப்பகம் சர்வதேசக் குற்ற நீதிமன்றுக்கு இலங்கைப் போரின் காலப்பகுதியில் நிகழ்ந்தவற்றைப் பாரப்படுத்த வேண்டும் என ஐநாவின் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை சீனாவும் இரஸ்யாவும் வலுவிழக்கச் செய்தமையை வன்மையாக் கண்டித்துள்ளது. போர் கடுமையடைந்திருந்த காலத்தில் சீனாவும் இரஸ்யாவும் இலங்கைக்குக் கடும் ஆதரவை வழங்கி வந்ததால் வெளித்தெரியவந்த பல குற்றங்களின் மீது கூட விசாரணையை முன்னெடுக்க முடியாதிருந்ததாகவும் தெரிவித்துள்ளது. .

### 400 கல்வியியலாளர்கள் வெளிநாட்டில் தஞ்சம்.

சுமார் 400 கல்வியியலாளர்கள் வெளிநாட்டிற்குப் படிக்கவென சென்றுவிட்டு அந்நாடுகளிலேயே தங்கிவிட்டதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்கள் அனைவரும் இலங்கை அரசுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளதால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் னெயலாளர் தெரித்துள்ளார். இவ்வாறு வெளிச்சென்றுள்ள 471 விரிவுரையாளர்களாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுமார் 2 பீல்லியன் ரூபாய்களை இழப்பதாகவும் தெரிவித்தார்

### ரணிலுக்கொதிராக சட்ட நடவடிக்கை – துரத்தப்பட்டவர்கள் பயமுறுத்தல்

ஊர்வலத்தில் பங்குபற்ற வேண்டாம் 'என ஐ.தே.க தடைவிதித்திருந்த சரத் பொன்சேகாவின் ஊர்வலத்தில் பங்குபற்றிய ஐ.தே.க வினரை கட்சியிலிருந்து துரத்தினார் ரணில். அவர்கள் ரணிலுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகப் பயமுறுத்தியுள்ளனர்.

ஐ.தே வின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்க பண்டார தனக்கு வெள்ளிக் கிழமை வரை ஊர்வலத்தில் பங்குபற்றினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனும் தபால் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை வெளியேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் நான் சர்வதேச நீதிமன்றம் வரை நியாயம் கேட்டுச் செல்லத் தயங்கமாட்டேன் என அவர் தெரிவித்தார்.

### கல்விச் சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ள கேணல் பதவிகள் இராணுவக் கேணல் பதவிகளுக்கு ஒப்பானதல்ல

இலங்கைக் கல்வி நிர்வாகசேவை அதிபர்களுக்கு வழங்கப்பட்ட கேணல் தரநிலையானது இராணுவத் தரநிலையல்ல என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய கூறியுள்ளார்.

கடந்த வாரம் பாதுகாப்பமைச்சில் நிகழ்ந்த விழாவொன்றில் 23 முதலாம் தர கல்வி நிர்வாக சேவை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சின் அலுவலர்க்கும் கௌரவ கேணல் தர நிலை அளிக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டுள்ளனர்.

தேசிய மாணவர் கடேற் அணியின் நன்மைக்காக அவர்கள் ஆற்றிய சேவையைக் கருத்திற்கொண்டே இக் கௌரவம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்விழாவில் அவர்கள் அணிந்திருந்த உடைகள் இராணுவ உடைகளுக் ஒத்திருந்த போதும் அத் தரநிலைகள் இராணுவத் தரநிலைகள் அல்ல என அவர் தெரிவித்தார்.

சில தொழிலாளர் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுவது போல அவர்களுக்கு உண்மையான ஆயுதப் பயிற்சி வழங்கப்படவில்லை. காற்றுத்துப்பாக்கியால் சுடுவதற்கே அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## The Sunday Times:

### அணுவலு ஆபத்து – இலங்கையின் வேண்டுகோளை நிராகரித்தது இந்தியா

கூடங்குளம் அணுமின்நிலைய பாதுகாப்புக்குளுக்களில் இலங்கை அதிகாரிகளையும் இணைத்துக்கொள்ளுமாறு இலங்கை கடந்த ஒருவருடமாக இந்தியாவை வேண்டி வந்துள்ளது. எனினும் இவ் வேண்டுகோளை இந்தியா நிராகரித்துவிட்டது.

இலங்கை அணுவலுத்திட்ட அதிகாரசபைத் தலைவர் கடந்த வாரங்களில் இந்திய அதிகாரிகளுடன் நடந்த இரு நாட் பேச்சுவார்த்தைகளின் பலன் இதுவே எனத் தெரிவித்துள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளின் பின் திடமான வாக்குறுதிகளை இந்தியாவிடமிருந்து பெறமுடியாது போய்விட்டதாக அவர் தெரிவித்தார்.

புத்தளத்திலிருந்து சுமார் 160 கிலோமீற்றர் தூரத்திலேயே கூடங்குளம் அணுமின்நிலையம் அமைந்துள்ளது.

உள்ளூர் சமூகவியலாளர்கள் இவ்விடயம் தொடர்பாக அரச அலுவலர்களைக் கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ளனர். அவர்கள் இலங்கை மக்களுக்கோ அரசிற்கோ கூடங்குளம் அணு உலையால் உண்மையில் ஏற்படப்போகும் தாக்கங்கள் தொடர்பாக அரச அதிகாரிகள் அறிவுறுத்தத் தவறிவிட்டார்கள் என்றே கூறிவருகின்றனர்.

### ரி 20 ஆடல் அழகிகளுக்குப் பின்னால் பெரும் பணச் சுருட்டல்

அனுசரணையாளர்கள் பெரும் பணத்தை செலவிட்டிருந்த போதும் இலங்கையின் ஆடல் அழகிகளை குறைந்த செலவில் பிடித்து போட்டிகளின் போது ஆட விட்டதன் பின்னணியில் பெருமளவு பணம் சுருட்டப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

திரு அபயசேகர என்பவருக்கு மூன்று மில்லியன் ரூபாத் தொகைக்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தமானது 24 நடன அழகிகளை தலா ஒவ்வொரு ஆடுகளத்திற்கும் தேர்ந்தெடுத்து அனுப்புவதுடன் அவர்களுக்கான உணவு இருப்பிட வசதிகளையும் அவர் செய்ய வேண்டுமெனக் கூறப்பட்டிருந்தது.

திரு. அபயசேகரவின் கம்பனி இலக்கைக் கம்பனிப் பதிவாளர் தளத்தில் காணப்படவில்லை என்பது கண்டுபிடக்கப்பட்டுள்ளது. அத்துடன் 12 நடன அழகிகளே ஒவ்வொரு ஆட்டத்திடலிலும் இருந்த தாகவும் அங்கு 24 ஆடல் அழகிகள் இருக்கவில்லை என்பதையும் பார்வையாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளதும் தெரியவந்துள்ளது.

## மாணவர்களிடையே...

தற்காலத்தில் புதிய வகைகளில் மாணவர்கள் போதையைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதானது அவர்களது உடனலத்தைப் பெரிதும் பாதிக்கும் என வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர். இப்பாதிப்பு உடினடியாக நிகழாது விட்டாலும் சிலவேளைகளில் சில மாதங்களின் பின் பக்க விளைவுகளை உருவாக்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

பெற்றோர்களின் கவனயீனமே இதற்குப் பெரும் காரணமாக அமைவதாக அவ் ஆசிரியர் தெரிவித்தார். பெற்றோர்கள் தமது பராயமடைந்த பிள்ளைகள் மீது முழுக்கவனமும் செலுத்த வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளதாக திருமலையின் பிரபல ஆண்கள் பாடசாலையின் முன்னால் அதிபர் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துக் கூறுகையில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசிற் பரீட்சை வரை தமது குழந்தைகளை மிகக் கண்ணும் கருத்துமாக வளர்க்கும் பெற்றோர் அதன் பின்னர் அவர்களின் மீது தமது கவனத்தைக் குறைத்துவிடுவதாகவும் அதனாலேயே பெருமளவு பிரச்சனைகள் எழுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ)

## வரி வாரக்....

அன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தம்புள்ளைக் கிளையினரால் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரி செலுத்துவோரை கௌரவிக்கும் முகமாக நிகழவுள்ள இக் கூட்டம் திருமலை நகரசபை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பம் ஆகி 12.30 மணி வரை நடைபெறும் என வரித் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒழுங்காக வரி செலுத்துபவர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பட்டிருப்பினும் வரி தொடர்பாக அறிவைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பும் விடுக்கப் பட்டுள்ளது.

## வெந்து நொந்தார்....

மேலும் குறித்த நகரசபை உறுப்பினர் அவ் வாணிவிழா நிகழ்வுக்கு அன்றையதினம் தான் அழைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புனித சூசையப்பர்...

விழாவில் மதிப்பு விருந்தினராக பேராயர் வணக்கத்திற்குரிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன், விசேட விருந்தினராக திருமலை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.என் விஜயேந்திரன் அவர்கள் அழைக்கப் பட்டுள்ளார்.

2001ம் ஆண்டிலிருந்து அதிபராகப் பொறுப்பேற்ற திரு. ஜீவனதாஸ் அவர்கள் 2012ம் ஆண்டுவரை இப்பாடசாலக்குச் சேவையாற்றியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய அரசின் ....

தம்மிடம் கையளிக்குமாறு மாகாண சபையை மத்திய அரசு கோரியிருந்தது.

இதனைத் தொடர்ந்து மூன்றாவது மாகாண சபையின் அமைச்சரவை இவ் வைத்தியசாலையை மத்திய அரசிடம் கையளிக்கும் தீர்மானத்தை கடந்த வாரம் மேற்கொண்டிருந்தது.

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள முக்கிய வைத்தியசாலைகள் யாவும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வருகின்றன.

மத்திய அரசிடம் கையளிக்கப்பட்டுள்ள இவ் வைத்தியசாலையின் நிர்வாகப் பணிகள் முழுவதும் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே நடைபெறவுள்ளது. மேலும் சிரேஸ்ட வைத்திய ஆலோகசர்களை தேவைக்கேற்ப மத்திய அமைச்சு அனுப்பிவைக்கும். அத்துடன் பழுதடையும் வைத்திய உபகரணங்களைத் திருத்தும் தொழில் நுட்ப வல்லுனர்களையும் அமைச்சே நேரடியாக அனுப்பிவைக்கும் செயற்பாடுகளைச் செய்யும் எனத் தெரிய வருகின்றது.

எனினும் கிழக்கு மாகாணத்திடமிருந்து இவ் வைத்தியசாலை மத்திய அரசிற்கு மாற்றப்பட்டுள்ளதால் அவ் வைத்தியசாலையைக் கையாள்வதற்காக வருடாந்தம் ஒதுக்கப்பட்ட நிதியினை எதிர்வரும் காலங்களில் மத்திய அரசு மாகாண சபைக்கான நிதியிலிருந்து குறைத்துக்கொள்ளுமா? என்பதை அறிய முடியாதுள்ளது.

(ஸ்ரீ)

## குத்தகைக்கு வருகின்றன.....

ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என நகரசபை கோரியுள்ளது.

2013.01.01. தொடக்கம் 31.12.2013 வரையான ஒருவருடகால குத்தகைக்கான விண்ணப்பங்களை 05.11.2012. திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிவரை நகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் எனும் அறிவித்தல் வெளியாகியுள்ளது.

## மார்க்க...

அருட்கொடை அன்னல் நபி(ஸல்) என்ற தலைப்பிலும் அஷ்ஷெய்க் எஸ்.எச்.தஸ்ரீக் (சஹ்தி) அவர்களால் "துல்ஹஜ் முதல் 10 நாட்களும் அறபா பேருரையும்" என்ற தலைப்பிலும் மக்களை தெளிவுபடுத்திய இந்நிகழ்வானது மிகவும் சிறப்பாக மூதூர் நத்வதுல் உலமா அறபுக்கல்லூரியில் இடம்பெற்றது.

## புதிய பொலிஸ்....

பதிந்தும் சென்றுள்ளனர்.

வீடுகள் சிலவற்றிற்கு புதிய பதிவுப் பத்திரங்களைக் காவல்த் துறையினர் விநியோகித்துச் சென்றுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் மாசி மாதம் அறுபத்தினான்காம் சுதந்திர தின விழா திருமலையில் நடக்கவிருப்பதால் இவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் நிகழ்வதாக பொதுமக்களிற் சிலர் தெரிவித்தனர்.

## பெயர் மாறும்...

முதலிக்குளம், குமரக்கடவை, கந்தளாய் போன்ற பண்டைய தமிழ்ப் பிரதேசங்களின் பெயர்கள் மொரவேவ, கோமரன் கடவல, கந்தலே என முற்றுமுழுதாகச் சிங்கள மருவியலுக்குட்பட்டுவிட்ட நிலையில் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களும் பெயர் மருவிப் போய்விடுமோ என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

திருமலையில் முதன் முறையாக

DHL

உங்கள், வெளிநாட்டிலுள்ள உறவினர்கள் நண்பர்களுக்கு விரைவாகவும் (ஐந்தே நாட்களுக்குள்) பாதுகாப்பாகவும் பொதிகளை (Parcel) அனுப்ப உங்களின் சிறந்த தெரிவு DHL முறையே!



தற்போது DHL மூலமாக
- உணவுப் பொருட்கள்
- உடைகள்
- பரிசுப் பொருட்கள்
- வாழ்த்து மடல்கள் மற்றும்
- முக்கிய ஆவணங்களை அனுப்பமுடியும்.

இதற்கு நீங்கள் நாடவேண்டியது.

SS DIGITAL'S
58, Vidyalayam Road, Trincomalee.
Hot Line: 026 2224933 / 0773663103
(சண்முக வித்தியாலயத்திற்கு முன்பாக)

DHL

## பற்றை காட்டினுள் மாணவியின் சீருடையும் சைக்கிளும்

திருக்கோணமலை தம்பலகாமம் பகுதியில் உள்ள பொற்கேணி கிராமத்திற்கு அருகில் உள்ள பற்றைக்காடொன்றில் இருந்து 13 வயது மதிக்கத்தக்க பாடசாலை மாணவி அணியக்கூடிய சீருடை மற்றும் பெண்கள் பாவிக்கும் துவிச்சக்கர வண்டி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

அநாதரவாக விடப்பட்ட நிலையில் இருந்த இந்த உபகரணங்கள் தொடர்பாக தம்பலகாமம் பொலிஸாரின் கவனத்திற்கு பொதுமக்கள் கொண்டுவந்ததையடுத்து பொருட் களை கைப்பற்றிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆயினும் தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவிகள் யாரும் காணாமல் போனதோ அல்லது பொருட்கள் திருடப்பட்டதோ தொடர்பான 7ந்த தகவல்களும் கிடைக்கவில்லை. ஆனாலும் இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## மூதூர் வலய மாணவர்களிடையே போட்டி நிகழ்ச்சிகள்



மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடரீதியில் அடைவுமட்டத்தினையும், மாணவர் செயற்பாடுகளையும், மேம்படுத்தும் வகையில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் இந்துசமய கலாசாரம் பேணும் வகையில் மூதூர் வலயக் கல்விப் பணிமனையின், தமிழ்த்துறை ஆசிரிய ஆலோசகர் திருமதி.உமா ரதீஸ்பரன் அவர்களால் மூதூர், ஈச்சிலம்பற்று என கோட்டரீதியில் போட்டிகள் இடம்பெற்றுவருகின்றன.

அப்போட்டிகளின் இறுதிச் சுற்று கடந்த 2012.10.13 ஆந் திகதி தி/மூ/சேனையுர் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

தரம் 6-11 வரையான வகுப்பு மாணவர்கள் கலந்துகொண்ட போட்டிகளில் தோரணம் இழைத்தல், சரங் கட்டுதல், மாலை கட்டுதல், சடைநாகம் அமைத்தல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகள் இடம்பெற்றதுடன், வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டது.

கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலச் சான்றிதழ்கள்

வெளிநாடு செல்வதற்கு சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட

ஆங்கில கற்கை நெறி

உயர்தரம் படித்துவிட்டு பெறுபேறுகளுக்காய்க் காத்திருக்கும் உங்களுக்காக முழுநேர பகுதிநேர வகுப்புக்கள்

READING
WRITING
LISTENING
SPEAKING

KET - KEY ENGLISH TEST
PET - PRELIMINARY ENGLISH TEST

NEW INTAKE NOW OPEN FOR FEBRUARY 2013 EXAM

Veal Business College, No. 159A Seaview Road, Trincomalee. T.P 026 2227622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 28. 10. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.